# பல்முனைத்துருவம் வழியாக சோசலிசம்:

# ஒரு அறிக்கை

## சர்வதேச அறிக்கை குழு

## செப்டம்பர் 2021

ஆளும் வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தை பாதுகாக்காத நிலையில் அது `ஆளும் வர்க்கமாய் இருப்பதற்கு தகுதி அற்று இருக்கிறது' என்றும் `அது தனது பிழைப்பிற்கான நிலைமைகளை சமூகத்தின் மீத கட்டமைக்கிறது' என்று கார்ல்மார்க்சும் ஏங்கெல்ஸ்சும் கூறினார்கள். அவர்கள் புரட்சியாளர்களுக்கு 1848-ல் முதலாளித்துவத்தை ஐரோப்பிய தொட்டிலில் திணறடிக்க அழைப்பு விடுத்தார்கள். மக்களின் வசந்தகாலம் பாரிஸ் கம்யூன் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளால் தொடரப்பட்டு உலகம் முழுவதும் கம்யூனிச பூதத்தை ஆட்டுவிக்க செய்தது. எதிர்ப்புரட்சியின் ஆபத்திற்கு மத்தியில் சமூக உறவுகளை ஜனநாயகப்படுத்தியது.

முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் மத்தியில் உழைக்கும் மக்களின் போராட்டங்கள் பொதுநல அரசுகளையும் பின்பு இரண்டாம் உலகப் போரின் முடிவில் முதலாளித்துவத்தையும் கட்டுப்படுத்தியது, பிறப் பகுதிகளில் தேசியவிடுதலையும் சமூகமேம்பாட்டு அரசுகளையும் வென்றெடுத்து இருக்கிறது. இதற்கிடையில், சில நாடுகள் 1917-களின் ரஷ்யப் புரட்சியில் தொடங்கி சோசியலிசத்தை கட்டும் பணிகளை மேற்கொண்டனர். அவர்கள் உற்பத்தியை தேவைக்காக செய்தனர், வேலை பகிர்வு மற்றும் நியாயமான வெகுமதி கொண்ட கூட்டுழைப்பு மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தன. மேலும் முழுமையடையாத வெற்றி, பிரச்னைகள் மற்றும் பின்வாங்கள் என இருப்பினும் இவை முதலாளித்துவதிற்கும், ஏகாதிபத்தியதிற்கும், ஒதுக்கப்பட்ட நிலைக்கும் அப்பால் உள்ள உலகத்திற்க்காகவும் சமூக நீதிக்காகவும் போராடுகின்றன.

இன்று கடந்த 10 ஆண்டுகளாக முதலாளித்துவ முரண்கள் அதிகமாகி வருகிறது. முதலாளித்துவ ஆளும் வர்க்கம், புதிய தாராளவாதம் அல்லது எஞ்சிய சமூக ஜனநாயகம், பணக்கார மற்றும் ஏழை நாடுகள் என அனைத்தும் மார்க்ஸ்சும் ஏங்கெல்ஸ்சும் உதிர்த்த சொற்களின் முக்கியத்துவத்தை காட்டுகின்றன. கடந்த 40 ஆண்டுகளாக மூலதனம், புதிய தாராளவாத நிதி மூலதனம் தனது உற்பத்தி இயக்கத்தை இழந்த உற்பத்தி திறன் அற்ற கொள்ளையாக மாற்றியிருக்கிறது முதலாளித்துவ கொள்கைகள். மேலும் அது பெருவாரியான மக்களுக்கு ஏழ்மை, சமத்துவமின்மை, சமூகப்பிளவுகள் அரசியலதிகார அடக்குமுறைகள், அணுஆயுத அச்சுறுத்தல், வெகுமக்கள் இயக்கங்கள் மற்றும் புவிவெப்பம், மாசு மற்றும் பல்லுயிர் இழப்புகள் என இறுதியாக உலகை வாழ தகுதி அற்ற இடமாக மாற்றியுள்ளது.

இதற்கு மேல், அது பெருந்தொற்று காலத்தில் உயிர்களை மூலதன லாபத்திற்கு இரையாக்கி அரசியல் அதிகார அடக்குமுறைகளை அதிகரித்து இருக்கின்றது. ரோஸாலுக்சம்பேர்க் சோசியலிசத்திற்கு மாற்று காட்டுமிராண்டித்தனம் என எண்ணினார், இன்று அது மனித இனம் மற்றும் உலகத்தின் அழிவு என்ற நிலையை எட்டியுள்ளது.

2010- ல் இருந்து அதிருப்தி வெடித்து எரிந்துகொண்டு இருக்கிறது.

கடந்த பத்தாண்டுகள் டுனீசிய போராட்டங்களின் விளைவாக அரபுவசந்தம், அதனை தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் சிக்கன (ஆஸ்டெரிட்டி) நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டங்கள், இந்திய முஸ்லிம் பெண்களின் குடியுரிமைக்கான போராட்டம், பள்ளி சிறுவர்களின் காலமாற்ற நிலைக்கு எதிரான போராட்டம், "பிளேக் லைப்ஸ் மேட்டர்ஸ்" மற்றும் பிரான்சின் " யெல்லோவ் வெஸ்ட்ஸ் " என போராட்டங்கள் பொருளாதார நம்பிக்கை இன்மைக்கும் அரசியல் அடக்குமுறைகளுக்கும் எதிராக துருக்கியில் தொடங்கி சிலியில் இருந்து நைஜீரியா வரை நீண்டு இருக்கிறது. 2020-ஆம் ஆண்டு இந்திய விவசாயிகள் ஒன்றிய அரசின் கார்ப்பொரேட் கொள்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டன, உலகின் மிகப்பெரிய முதலாளித்துவ நாடான இந்தியாவில் இதுவரை இல்லாத அளவு தொழிலாளர்களின் பொதுவேலைநிறுத்தம் நடந்து இருக்கிறது.

இடிந்துவிலும் நிலையில் உள்ள முதலாளித்துவம் பெருந்தொற்றை மோசமாக கையாண்டு மூக்குடைந்த நிலையில் இருக்கிறது. முதலாளித்துவம் மக்களின் வாழ்விலிருந்து வாழ்வாதாரத்தை பிரித்து கோடிக்கணக்கான மக்களை கொன்று பொருளாதார நெருக்கடிகளை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு தூண்டியிருக்கிறது.

2021-ன் மத்தியில் குடிமக்கள் ஏகாதிபத்திய நாடுகளின் அணுகுமுறையின் கொலைகார தன்மையை கேள்வி எழுப்பி இருக்கிறார்க்கள், லட்சக்கணக்கான மக்கள் பிரேசில் தெருக்களில் இறங்கி அந்த நாட்டு அரசை இனப் படுகொலை குற்றம் சாட்டி இருக்கின்றார்கள். இந்திய மக்களும் அதனை நோக்கி நகர்கிறார்கள். முதலாளித்துவத்திற்கு எதிராக அதிருப்தி அலைகள் எழுந்து இருக்கின்றது: சிலி நாட்டு மக்கள் ஒரு மப்பூச்சி பழங்குடி பெண்ணை சட்டசபையில் தலைமைப்பொறுப்பில் அமர்த்தி இருக்கிறார்கள், பொலிவியாவில் ஆட்சிக்கவிழ்பு நிகழ்ந்து இருக்கிறது, பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலுக்கு எதிராக இதுவரை இல்லாத அளவு ஒற்றுமையை கண்டு இருக்கிறார்கள்.

முதலாளித்துவ உலகம் அரசியல் வெடிமருந்தாக தற்பொழுது இருக்கிறது: முதலாளித்துவத்தின் பொருத்தம் கேள்வி எழுப்பப்படுகிறது, அரசியல் ஸ்தாபங்கள் தன்னுடைய பிடியை இழந்து வருகிறது மற்றும் பொது நீரோட்டத்தில் உள்ள ஊடகங்கள் நம்பகத்தன்மையை இழந்து உள்ளது.

அதற்கு மாறாக சோசியலிச நாடுகளின் நோய்த்தொற்றின் மீதான அணுகுமுறை பின்பற்றத்தக்கதாக இருக்கிறது: சீனா, வியட்நாம் மற்றும் கியூபா ஒப்பீட்டளவில் குறைந்த மக்களை இழந்து இருக்கிறது. இதை தாண்டி பிற நாடுகளுக்கு சீனா உதவி செய்து வளர்ச்சி பாதையையும் விரைவாக எட்டியிருக்கிறது.

உண்மையில் 2021-ல் சீனா அளவிற்க்கு எந்த நாடுகளும் உழைக்கும் மக்களுக்கு பங்காற்றவில்லை பிற சோசியலிச நாடான கியூபாவின் பங்கும் குறிப்பிடத்தக்கது. சீனாவின் சாதனையானது போற்றத்தக்கது- அரசியல் மற்றும் தொழிற்ப்புரட்சிகள், நிலப்பிரபுத்துவதை ஒழித்தல், அறுதி ஏழ்மையை ஒழித்தல் மற்றும் சூழலியல் சிக்கல்களுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல், காடுவளர்ப்பு மற்றும் அணு இணைப்பு வாயிலாக தீர்வு கண்டு வருகிறது.

தற்பொழுது ஆட்சிசெய்யும் சீன கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய நூற்றாண்டை கொண்டாடியதில் எந்த ஒரு ஆச்சிரியமும் இல்லை. இது மனிதகுலத்திற்கான சோசியலிச போரட்டத்தில் தவிர்க்க இயலாத ஒன்றாகும், மக்களுக்கு உதவியும் உத்வேகமும் அளித்து சோசியலிஸத்திற்கு உதாரணமாக திகழ்கிறது.

இன்று போராட்டங்கள் ஆபத்தான நிலையை எட்டி உள்ளது. முதலாளித்துவ நெருக்கடிகள் பல ஆண்டுகலாக காய்ந்து கொண்டிருந்த நிலையில் இன்று பெருந்தொற்றின் காரணமாக கொதிநிலையை எட்டியுள்ளது. இவை சீனாவின் வெற்றிக்கு நேர்மாறாக இருப்பதை காணலாம், தலைமை ஏகாதிபத்திய நாடுகள் பிற ஏகாதிபத்திய நாடுகளையும் மற்ற எடுபிடி

நாடுகளையும் சீனாவிற்கு எதிராக திருப்பி "புதியப்பனிப்போர்" ஒன்றை துவக்கியுள்ளது. முன்பு இருந்ததை போன்று இந்த பனிப்போரும் நாடுகளின் தற்சார்பு வளர்ச்சிக்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்கள் பாலஸ்தீனத்தில் இருந்து பெரு வரை மற்றும் வியட்நாமிலிருந்து வெனிசுலா வரை நீண்டு இருக்கிறது. உலகத்தின் பயமுறுத்தக் கூடிய ஆயுத கிடங்குகள், அணுஆயுதம், ரசாயனம், உயிரியல் மற்றும் இணையம் போன்ற ஆயுதங்கள் வழிமுறையாக பயன்படுத்தப்படுகிறது. இதுவரை இல்லாத அளவு அழிவு சக்திகள் பொறுப்பற்ற சிலரிடம் குவிந்து கிடக்கிறது. இந்த நிலையில் இவை அனைத்தும் மக்களின் சோசியலிச குறிக்கோள்களுக்கு எதிராக கையாளப்படுகிறது.

நமது அறிக்கை பல அபாயங்களுக்கும் அனைத்து கண்டத்தைசேர்ந்த சோசியலிச பண்பாட்டு செயற்பாட்டாளர்கள் விவாதத்துக்கு மத்தியில் உதித்திருக்கிறது. இந்த அறிக்கை நிகழ் காலத்தில் நடப்பதை மதிப்பிட்டு, வர்க்கம் மற்றும் நாடுகளின் சோசியலிசத்திற்கான போராட்டங்களை முன்னெடுக்க வழிவகை செய்கிறது.

## முதலாளித்துவத்தின் புவி அரசியல் பொருளாதாரமும் சோசியலிசமும

முதலாளித்துவமும் புரட்சிகளும் நெருக்கமானது, பூர்ஸ்வா புரட்சி இதனை வரலாற்றுக்கு அறிமுகப்படுத்திய நிலையில் இதை புரட்சிகள் அச்சுறுத்தியும் இருக்கிறது, 1917இன் ஆரம்பத்தில் இருந்து பிரபலமான புரட்சிகள் இதை வரலாற்றில் இருந்து வெளியேற்றிக்கொண்டு இருக்கின்றன. இந்த முதலாளித்துவ அமைப்பானது தாராளவாதிகளின் கட்டுக்கதைகளுக்கு மாறாக செயற்கையான ஒரு அமைப்பு. இது `சுதந்திரமான உழைப்பை புறநிலை உணர்தலில் இருந்து பிரித்துவைத்திருக்கிறது` மற்றும் `மண் இயற்கை தொழிற்சாலையாக` இருப்பதில் இருந்தும் பிற உற்பத்தி கருவிகளிடம் இருந்தும் பிரித்து உள்ளது.

இந்த எளிமையான உண்மை பரவலாக சோசியலிஸ்டுகளிடையே புரிந்து கொள்ளப்பட வேண்டிய அளவு புரிந்துகொள்ளப்படவில்லை. போல்ஷெவிக்குகளும் மூன்றாம் அகிலமும் புரிந்து கொண்டது போன்று முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் சேர்ந்து செல்லக்கூடியது. இவை இரண்டுமே நாடுகள் மற்றும் வர்க்கங்களின் சோசியலிசத்திற்கான போராட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக அரசியல்பொருளாதாரம் மற்றும் புவி அரசியல் தளங்களில் திகழ்கிறது. மேலும், அனைத்து சமத்துவ சமூகங்களும் முதலாளித்துவத்தை எதிர்க்கின்றது, இன்று பழங்குடி மக்கள் அதன் தாக்குதல்களை எதிர்த்து வருகிறார்கள். இவர்கள் பழமையான சட்டம், நிலம், சுற்றுசூழல் மற்றும் சமூகம் என்கின்ற பெயர்களில் முதலாளித்துவத்தை எதிர்க்கிறார்கள்.

அரசியல் ரீதியாக அணிதிரட்டபட்ட முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நடக்கும் இந்த வர்க்கப் போரில் தொழிலாளர்கள் முதலாளிகளை கட்டாயப்படுத்தி மூலதனத்தின் மீதான கட்டுப்பாடுகள், சலுகைகள் மற்றும் மூலதனத்தின் மீதான வரி போன்றவற்றை வென்று நிலம், உழைப்பு மற்றும் சமூகத்தைக் காக்கின்றன.

சர்வதேச அளவு சீரற்ற மற்றும் ஒன்று சேர்ந்த வளர்ச்சிக்கு இடையிலான இயங்கியலில், சக்திவாய்ந்த நாடுகள் தனது மேலாண்மையை பாதுகாக்க பொருளாதாரம், ராணுவம் மற்றும் அரசியலை பயன்படுத்துகிறது, அடிக்கடி இந்த நாடுகளுக்குள் போட்டியும் உண்டு. அவர்களுக்கு எதிராக போராடுபவர்கள் தனது உற்பத்தி சக்தியை அரசின் வழிகாட்டுதல் படி பெருக்கவும் பொருளாதார இறையாண்மையை பாதுகாக்கவும் முயல்கிறார்கள், இவை உலக சந்தையை விரிவுபடுத்தவோ அல்லது ஏகாதிபத்யமோ அல்ல, இது உற்பத்தித்திறனை உலகம் முழுவதும் பரப்புபவதற்க்கானது. எங்கு தனியார் மூலதனம் அரசியல் அதிகாரத்தில் இருந்து தள்ளி வைக்கப்படுகிறதோ அங்கு பொருளாதார வளர்ச்சியும் வெற்றியும் ஏகாதிபத்தியத்துக்கு சவால் விடும். ஏகாதிபதியாத்திற்கு எதிரான போராட்டங்களின் விளைச்சல்தான் "பல்முனை அரசியல்பொருளாதாரம்" (மல்டிபோலாரிட்டி) அல்லது ஹியூகோ

சாவேஸ் கூறியது போன்று "ப்ளூரிபோலாரிட்டி", இதற்கு அர்த்தம் பல்துருவ அதிகாரம் மற்றும் பலவகை தேசியபொருளாதார சோசலிசம்.

ஆரம்பகட்ட பல்முனை அரசியல்பொருளாதாரமானது பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான போட்டி, இவை சந்தை பிடிப்பதற்கு மட்டும் அல்லாமல் காலனியத்திற்கும் பொருளாதார பிரதேசத்தை பிடிப்பதற்கும் ஆகும். இவர்கள் வலுவற்ற அரசுகளை அரசல்லாத பிரதேசங்களை தற்பொழுதும் எடுக்கிறார்கள்.

இந்த போட்டியானது முதலாளித்துவ ஏகாதிபத்யத்தால் தோற்றுவிக்கப்பட்டு முதல் உலகப்போர் மற்றும் 30 வருட நெருக்கடியில் (1914-1945) முடிவடைந்தன, இதனை தொடர்ந்து வர்க்கம் மற்றும் தேசிய போராட்டங்கள் மற்றும் பாசிசத்தின் வீழ்ச்சியில் முடிவடைந்தன, இரண்டு உலகை திருப்பி போட்ட புரட்சிகள்- ரஷ்ய மற்றும் சீன புரட்சி- காலனியத்துற்கு எதிராக நின்றது. இந்த நெருக்கடிகளின் திட்ட வரைவு தடமறிவதற்கு தகுதியானது, இந்த போட்டியானது முதலாளித்துவ ஏகாதிபத்யத்தால் தோற்றுவிக்கப்பட்டு முதல் உலகப்போர் மற்றும் 30 வருட நெருக்கடியில் (1914-1945) முடிவடைந்தன, இதனை தொடர்ந்து வர்க்கம் மற்றும் தேசிய போராட்டங்கள் மற்றும் பாசிசத்தின் வீழ்ச்சியில் முடிவடைந்தன, இரண்டு உலகை திருப்பி போட்ட புரட்சிகள்- ரஷ்யா மற்றும் சீனபுரட்சி- காலனியத்துற்கு எதிராக நின்றது. இந்த நெருக்கடிகளின் திட்ட வரைவு தடமறிவதற்கு தகுதியானது.

## ஏகாதிபத்திய நெருக்கடி

ட்சாரின் ருஷ்ய ஏகாதிபத்தியம் சங்கிலியின் வலுவற்ற இணைப்பாக இருந்தது. இதற்கு எதிரான ருஷ்ய புரட்சி மனிதகுலத்தின் சோசியலிச பாதையை துவங்கி வைத்துள்ளது. இது முதலாளித்துவ நாடுகளுக்கு வெளியே நடந்த நிலையில் தனது உற்பத்தி சக்திகளையும் சமூக நீதியையும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அடையவேண்டியிருந்தது. உண்மையில் ருஷ்ய மற்றும் சீன புரட்சி முற்போக்கு இயக்கங்களுக்கு இரண்டு கண்களாக திகழ்ந்து ஏகாதிபத்தியத்தை தாக்கியது. பாசிசத்துக்கு எதிரான வெற்றி ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இரெண்டிலிருந்து மூன்றுகோடி உயிர்களை பழிவாங்கியது.

சீனா முக்கியமான பாசிச எதிர்ப்பு நேசநாடாக அறியப்பட்டது. 1943 அளவில் அனைத்து சமத்துவமற்ற ஒப்பந்தங்களுக்கும் முடிவுகட்டியது மட்டும் அல்லாமல் 1945-ல் ஐ.நா வை உருவாக்கிய ஐந்து நாடுகளுள் ஒன்றாகும். பிறகு நான்கு வருடம் கழித்து மாவோவின் செஞ்சேனை உள்நாட்டுப்போரில் ஜப்பானிய தோல்வியை அடுத்து வெற்றி அடைந்தது. ஆனாலும், அமெரிக்கா சீனாவை 1971-வரை ஐக்கியநாடுகள் சபையை விட்டும் பாதுகாப்பு கவுன்சிலைவிட்டும் விலக்கி வைத்திருந்தது.

ஏகாதிபத்திய நெருக்கடியில் காலனிய மற்றும் அரைக்காலனிய நாடுகள் சுதந்திரம் அடைந்த நிலையில் இவை சீனாவாலும் சோவியத் ஒன்றியத்தாலும் ஆதரிக்கப்பட்டன. இதற்கு நேர்மாறாக, அமெரிக்காவின் நிலை போலியானது. அது மேற்குலக நாடுகளின் மேலாண்மையை பாதுகாத்தது, ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டு வீசி சோவியத் ஒன்றியத்தை அச்சுறுத்தியது. அமெரிக்கா முன்பு காலனிகளாக இருந்த நாடுகளின் பொருளாதாரத்தை அடைய துடித்தது, சில ஆதரவுகளை அளித்தாலும் 1945-ல் இருந்து 50 முறை மூன்றாம் உலகநாடுகளின் மீது போர் நடத்தியுள்ளது. அமெரிக்கா மிக உயர்ந்த போர்க் கருவிகளை வைத்திருந்தாலும் அவை விடுதலை வீரர்களின் உறுதிக்கு ஈடு இல்லாதது. உதாரணமாக கொரிய படைகளுக்கு உதவிய சீன படைகள் மற்றும் ஹோ.சீ.மின் தலைமையிலான வியட்நாம் படை. அமெரிக்க படைகள் ஈராக், சிரியா மற்றும் கடைசியாக ஆப்கானிஸ்தானில் தற்பொழுது தோல்வி அடைந்துள்ளது.

சுதந்திரமான மூன்றாம் உலக நாடுகள் சுய அதிகாரத்தையும் சமத்துவமான தேசிய வளர்ச்சியையும் மற்றும் தொழில்மயப்படுத்தலையும் கொண்டு ஏகாதிபத்தியத்தை உடைக்க

நினைக்கிறது, அதை சோசியலிச நாடுகளின் உதவியாலும் ஊக்கத்தாலும் தனது உற்பத்தி அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் 1970-ல் இருந்து 1980-வரை புதிதாக தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளான பிரிக்ஸ் (பி.ஆர்.ஐ.சி.எஸ்) மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் வெற்றிக்கு பெயர் போனவை, பிற நாடுகளும் சில நன்மைகளை அடைந்துள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி சோசியலிசத்திற்கு ஒரு தற்காலிக பின்னடைவு எனினும் இவை அதன் தொடக்கத்தின் முடிவே தவிர சோசியலிசத்தின் வீழ்ச்சியல்ல. சோசலிசம் அதனை தொடர்ந்து கம்யூனிசத்திற்கான பாதை நீண்ட பாதையாகும், இதனை மேற்கொண்ட சமூகங்கள் மாயமாக வர்க்க மற்றும் சமூக முரண்களை விடுக்கவில்லை பின்னடைவு என்பது நடக்கக்கூடிய ஒன்று. மொத்தமாக சோசியலிச புரட்சிகள் இதுவரை ஏழை நாடுகளில் தான் நடந்து இருக்கிறது இவை தனது உற்பத்தி சக்திகளை ஏகாதிபத்திய சார்பில் இருந்து நீக்கி அதற்கு எதிராக அவற்றை வளர்க்கிறது. ஸ்டாலினின் கலெக்ட்டிவிசமும் மற்றும் மாவோவின் கிரேட் லீப் போர்வேர்டும் இப்படிப்பட்ட சிக்கல்களின் ஒருசேர்க்கை தான்.

இதுவரை நடந்த சோசியலிச கதைகள் ஏங்கல்ஸ் மனதில் இவ்வாறாக பிரதிபலிக்கிறது, சோசலிசம் 'காலத்திற்கும் கெட்டிதட்டிப்போன அமைப்பு கிடையாது', அது நிலையான மாற்றங்களையும் உருமாற்றங்களையும் கொண்டது. மார்க்ஸ் தொழிலாளர்கள் புரட்சியை பற்றி இவ்வாறாக கூறுகிறார்.

......தொழிலாளர்களின் புரட்சி இடையிராது தன்னை விமர்சித்து கொள்ளும், இடையிராது தன்னை குறுக்கிட்டு கொள்ளும் ....மறுபடியும் புதிய தொடக்கத்தை தொடங்க முயற்சிக்கும்; முதல் முயற்சியானது எதிரிகள் மீது ஏளனம் கொண்ட பூரணத்துவம் அற்ற அரைகுறை நடவடிக்கைகள், வலிமையின்மை மற்றும் அற்பத்தனமாக எதிரிகள் வீழ்ந்துவிட்டதாக நினைக்கும் பொழுது அவர்கள் பூமியில் இருந்து வலிமையை திரட்டி மிகப்பெரிய அமைப்பாக இதுவரை இல்லாத அளவு திரண்டு உயர்வார்கள், தனது குற்றிக்கோள்களை பலமுறை தகவமைத்து கொள்வார்கள் -அனால் ஒரு தருணத்தில் எதிர்ப்புரட்சி இயலாத காரியம் ஆகும்.

நம்முடைய இந்த காலவரையற்ற பெரும் முயற்சிக்கு வேண்டியது சோவியத் ஒன்றியத்தின் மரபுகளை காப்பாற்றுவது. இதுவரை அனைத்து முயற்சிகளும் அதன் சாதனைகளும், வறையரைகளையும், தோழ்விகளும் இருப்புநிலை குறிப்பில் இருக்கிறது. இதில் நகைப்புக்குரியது எதுவென்றால் இந்த முயற்சிகள் முதலாளித்துவத்தை நெருக்கடியிலிருந்து காத்திருக்கின்றது .

## முதலாளித்துவ நெருக்கடி

வளர்ந்து வரும் மார்க்சிய, லெனினிய மற்றும் பிற மார்க்சிய கண்ணோட்டங்கள் மிக சரியாக முதலாளித்துவம் தனது முதிர்ந்த நிலையை 20-ஆம் நூற்றண்டில் எட்டிவிட்டது என வாதிட்டனர். அது தனது வரலாற்று கடமையான உற்பத்தி சக்திகளை பெருக்குவதை குழப்பத்தாலும் தன்னுடைய கொடூர முறையாலும் நிறைவேற்றி இருக்கிறது. முன்பு முதலாளித்துவம் உழைப்பை சமூகமயப்படுத்தியது பின்பு ஏகபோக முதலாளித்துவம் தொழில்நுட்பம் மற்றும் உழைப்பு பிரிவினையை தொழிலாளர்களிடையே ஆழமாக்கி உள்ளது.

அதன்பின் முதலாளித்துவம் போட்டியை தீவிரமாக்கி நன்மைகளை கொடுத்த நிலையில் தற்பொழுது அது ஒரு வட்டி ஏகபோகமாக மாறி இருக்கிறது. அது வளங்களை போட்டியை முறியடிப்பதற்கு பயன்படுத்தி வருகிறது.

.இந்த முதிர்ந்து போன முதலாளித்துவம் உலகை 30 வருட நெருக்கடியில் தள்ளியது, 1945-க்கு பிறகு நிலைப்படுத்தப்பட்டு 30 வருட பொற்காலத்தை கண்டது. இதற்க்கு காரணமாக இருந்தது சமூகநலன் பாதுகாப்பு, பொதுத்துறை மற்றும் திட்டமிடல். ஜப்பான், தெற்கு கொரியா மற்றும் தய்வான் போன்ற நாடுகள் சோசியலிச நாடுகளிடம் இருந்து நிலசீரமைப்பு கொள்கை

கருவிகளை பெற்றன. இந்த முன்னெடுப்புகள் வளர்ச்சி, தொழிலாளர்கள் நுகர்வை அதிகரித்தல், காலனிய சந்தைகளுக்கு நஷ்டஈடு, ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மேம்பாட்டிற்கான ஆதரவுகளை அளித்தது. அமெரிக்கா இந்த அற்புதமான சீரமைப்புகளை சகித்துக்கொள்ள வற்புறுத்தப்பட்டது, ஏனென்றால் அவர்கள் மேற்க்குலக தொழிலாளர்களையும் கிழக்குலக விவசாயிகளையும் கம்யூனிஸத்தில் இருந்து தடுப்பதற்காக முயற்சித்தார்கள்.

அதனுடைய ஈர்ப்பு கணிசமாக இருந்தது. கம்யூனிஸ்டுகளால் வழி நடத்தப்படக்கூடிய நிலையான வளர்ச்சியை தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளால் நிகழ்த்தியது. சோவியத் ஒன்றியம் அணு ஆயுதத்தை 1949-ஆம் ஆண்டில் செய்தது பிறகு ஸ்புட்னிக் செயற்கைக்கோளையும் பின் 1961-இல் யூரிகாகோரினையும் பூமியின் சுற்றுவட்டப் பாதையில் நிறுத்தியது. இதன் விளைவாக அமெரிக்கா தனது பொறாமையையும் தற்பெருமையையும் மனிதனை நிலவுக்கு அனுப்பி காட்டியது.

.பெருவாரியான மூன்றாம் உலகம் கம்யூனிசத்ததின் பக்கம் சென்றது பெரிய ஆச்சரியம் கிடையாது. இவை சுயசார்பான தேசிய வளர்ச்சியை நோக்கி சென்றன. மேலும் சீனா மற்றும் சோவியத் வளர்ச்சியை மேற்கு வளர்ச்சியை விட அதிகமாக பரிந்துரை செய்தார்கள்.

போருக்கு பிந்தைய காலத்தில் உலகம் இடது பக்கம் நகர்ந்தது, சர்வதேச ஒழுங்கமைப்பும் கூட. அமெரிக்கா பிரிட்டானிய 19-ஆம் நூற்றாண்டு ஆதிக்கத்தை கட்ட நினைத்தாலும் உலகம் பல்முனை அரசியல்பொருளாதார அமைப்புகளை நோக்கி நகர்கிறது. அமெரிக்காவின் பனிப்போர் நடையானது எடுபடவில்லை, அமெரிக்கா பிற முதலாளித்துவ சக்திகளின் அரசு வழிக்காட்டுதலின் வழியான வளர்ச்சியால் கட்டுப்படுத்தப்படுகிறது, சோசியலிசங்கள் நிலைப்பெற்று பெருகத் தொடங்கியுள்ளன. மூன்றாம் உலக நாடுகள் தனது இறையாண்மையை பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன.

.சர்வதேச ஆட்சிமுறைகள் பிரென்டன் வுட்ஸ் நிறுவனங்களை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையை மையமாக வைத்து சமத்துவம், தேசிய இறையாண்மை மற்றும் ஆக்கிரமிப்பு இன்மை ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

அமெரிக்கா டாலரை உலகத்தின் மீது திணித்திருக்கிறது. ஆனால் டாலர்-தங்க மாற்றவைகளுக்கு மட்டுமே வாக்குறுதி அளித்திருக்கிறது. அது நேட்டோவை உருவாக்கியதே வார்ஸா ஒப்பந்த அமைப்பை தாக்கத்தான்.

மூலதன கட்டுப்பாடுகள், திட்டமிடல், பொருளாதார மற்றும் வணிக மேலாண்மை, நிதி மற்றும் பணக்கொள்கை ஆகியவை முழுமையான தேசிய வளர்ச்சியை நோக்கி நகர்த்தியது, இவை அனைத்திற்கும் காரணம் மூலதனம் தேசிய கூண்டிற்குள் இருந்த காரணம் தான்.

மூன்றாம் உலக நாடுகள் பின் தங்கியிருந்த நிலையில் சக்தி வாய்ந்த சர்வ்தேச இயக்கங்கள், பேண்டுங் மாநாட்டின் அணிசேரா இயக்கங்கள, சீனா முதற்கொண்டு 77க்கு மேலான குழுக்கள் மற்றும் சர்வதேச வணிகம் மற்றும் வளர்ச்சி மாநாடு ஐக்கிய நாடுகளின் வணிகம் மற்றும் வளர்ச்சிக்கான மாநாடு ஆகியவை வளர்ச்சியை காட்டியது - சுயநிர்ணயம் மற்றும் தெற்கு-தெற்கு கூட்டுறவுகளும் அடக்கம். அமைதியாக ஒருங்கிணைந்து வாழ்வதற்கான ஐந்து கொள்கைகள்- இறையாண்மை மரியாதையை, பிராந்திய நிர்ணயம், ஆக்கிரமிப்பு போர் இல்லாமை, உள்நாட்டு விவகாரங்களில் பிற தலையீடு இல்லாமை, சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மை மற்றும் அமைதியாக ஒன்றுகூடி வாழ்தல்- ஜூ என்லாய் யாலும் ஜவஹர்லால் நேருவாலும் 1954-ல் ஒப்புக்கொள்ளப்பட்டது, இவை முதலாளித்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பின்னடைவை தந்தது.

இடது அணிக்குள்ளும் மாற்றம் நடந்தன, முக்கியமாக சீனா-சோவியத் பிரிவு மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இடது சோசியலிசத்தின் சரிவு.

எனினும் மூலதனம் ஏகாதிபத்திய முதலாளிகளின் கைகளில் இருந்தது . அது தனது உற்பத்தி திறனை அரசு, உழைக்கும் வர்க்கத்தின் நுகர்வு திறன் அதிகரிப்பு, சமூக வளர்ச்சி பணிகளையும் நுகர்வையும் அதிகப்படுத்தியதால் தவிர்க்க இயலாதவாறு உற்பத்தி நுகர்வை மிஞ்சியது. உற்பத்தி திறன் அரசின் உதவியின் கீழ் பெருகியது. மேற்குலக நாடுகளின் தொழிலாளர்கள் அமைப்பு மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் அதிகமான கூலியும்

விலையும் ஏகாதிபத்திய லாபத்தை நசுக்கின. பிறகு முதலீடும் வளர்ச்சியும் சிறிதாகிப் பொருளாதார நெக்கடிக்குள் நுழைந்தது ஏகாதிபத்தியம்: இரண்டாவது மந்தநிலை 1970-ல் வியட்நாமில் அமெரிக்காவின் தோல்வியுடன் சேர்ந்து நடந்தது.

## புதிய தாராளமயம்: அமுதமா அல்லது முதிர்ந்த முதலாளித்துவமா

முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு தற்பொழுது தேர்வுசெய்யும் வாய்ப்பு உள்ளது: ஆழமான சமூக சீர்திருத்தம், அரசுடமை மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் தேவையை அதிகரிக்க முதலீடு செய்தல் அல்லது புதியதாராளவாத வங்கிகளின் போருக்கு பின்னான மூலதன கட்டுப்பாடுகளை தகர்த்து மூலதனத்தை தன்நாட்டில் இருந்து வெளியேற்றி பிற நாடுகளில் முதலீடு செய்வது. முதல் தேர்வு உழைக்கும் மக்களுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் நன்மை திருவதாகும், இரண்டாம் தேர்வு மூலதனத்துக்கும் அதன் எடுபிடி தரகர்களுக்கும் சாதகமானதாகும்.

.மூலதனம் வென்றது. இடதுசாரிகள் அரசியல் ரீதியாகவும் அறிவுசார்ந்த நடவடிக்கை ரீதியாகவும் வலுவற்று இருந்தனர், வரலாற்று ரீதியாக சீர்திருத்தத்தால் பரவலாக முதல் உலகப்போர், 1917-க்கு பின்னான சோசியலிச புரட்சிகள், நயவஞ்சக பனிப்போர் மற்றும் பொதுநல அரசுகளால் உயர்த்தப்பட்ட வாழ்வு நிலையால் பிளவுபட்டு இருந்தனர்.

இடதுசாரிகளால் பெருவாரியான மக்களை அணிதிரட்ட இயலவில்லை- தொழிலாளர்கள், பெண்கள், தேசிய விடுதலை இயக்கங்கள்- முதல் தேர்வில் அனைத்தையும் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தது இரண்டாம் தேர்வில் அனைத்தையும் இழக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. அனால், மூன்றாம் உலக நாடுகளில் கூட அர்த்தமுள்ள அரசியல் மாற்று இல்லாமல் போனது. சோசியலிசமும் புரட்சியும் முன்னேறுகிற நிலையில் உதாரணமாக ஆப்கானிஸ்தான், ஏமன், அங்கோலா மற்றும் நிகராகுவா ஆகிய நாடுகளுக்கு ஏகாதிபதியத்தில் இருந்து அழுத்தம் தரப்பட்டது, இதில் சோவியத் ஒன்றியத்தின் எதிர்ப்புரட்சி தரகர்களும் அடக்கம்.

புதிய தாராளமயம் தன்னுடைய வரவை தொழிலாளர்களுக்கு கிடைத்த வரலாற்றுப் பயன்களை தாக்குவதன் மூலம் அறிவித்துள்ளது. இது மூன்றாம் உலகம் மீதான வட்டி விகிதத்தை ஏற்றுவதன் மூலம் நாடுகளை 20 ஆண்டுகள் பின் தள்ளி அதிர்ச்சி அளித்துள்ளது. உழைக்கும் மக்களின் துயரம் முன்னாள் சோவியத் ஒன்றியத்தில், ஐரோப்பிய நாடுகளிலும் பரவியுள்ளது.

.புதிய தாராளமயம் ஆட்சிசெய்தாலும், அது தோற்று உள்ளது. ஏகாதிபத்திய நாடுகள் கூட தனது சக்திவாய்ந்த முதலாளித்துவ வளர்ச்சியை இழந்துள்ளது. இது தோற்கடிக்கப் படவேண்டிய அறிவற்ற வஞ்சகமான ஒரு அமைப்பு. இது ஏகபோக முதலாளித்துவத்தின் குறிப்பிட்ட நிலையில் உருவாகி உள்ளதால், மூலதன சலுகைகளை உழைக்கும் மக்களுக்கு எதிராக உயர்த்தி பிடிக்கிறது, சோசியலிச மற்றும் தேசிய தன்னாட்சிக்கு எதிராக இருக்கிறது. இவை பொருளாதார சுதந்திரம், தனியுடமை உரிமைகள் மற்றும் சுதந்திர சந்தை போக்கு போன்ற வாசகங்களால் புகழ்பாடி வருகின்றது.

இது 50 ஆண்டுகளுக்கு பின்னான மறுமலர்ச்சி, புதிய தாராளவாத மூலதன கனவு என்பது வேறேதும் அல்ல, அது 1914-க்கு முன்பான எதேச்சதிகார மற்றும் ஏகாதிபத்திய மூலதனத்தின் கனவாகும்.

எனினும், வரலாற்று கடிகாரம் பின்னோக்கி செல்லாது மற்றும் நவீன-தாராளமயமும் சீரற்ற முறையில் முன்னேறி உள்ளது- ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் வெகுதூரம் சென்றுவிட்டது- அனால் ஒவ்வொரு அடியிலும் பெரும் எதிர்ப்பை சந்தித்து இருக்கிறது.

உள்நாட்டில் புதிய தாராளவாதம் அரசு உடைமையை, கட்டுப்பாடுகளை, சமூக பாதுகாப்புகளை பின்னுக்கு தள்ளி இருக்கிறது. மேலும், தொழிற் சங்கங்கள் மீது தாக்குதல் நடத்தி இருக்கிறது, உழைக்கும் மக்களின் வேலையின்மையை அதிகரித்து இருக்கிறது, உண்மையான கூலி தேங்கியுள்ளது, சிறிய பயன்களை உடைய பொதுநல அரசுகளுக்கு எதிராக இவற்றுக்கு எதிராக தாக்குதல் நடத்தியுள்ளது. சக்திவாய்ந்த வேலை தருபவர்களையும் மற்றும் சிறிதளவு சமூக சேவைகளையும் தான் விட்டு வைத்துள்ளது.

சர்வதேச அளவில் சர்வதேச நாணய நிதியம்(ஐ.எம்.எப்) மாற்றும் உலக வங்கி ஆகியவற்றை ஏகாதிபத்தியங்கள் தனது வேலையாள் போல் மாற்றிவிட்டன. கடன் கொடுப்பவர்களின் பொறுப்பை கவனிக்காதவாறு இருந்துகொண்டு, மூன்றாம் உலக நாடுகளை வற்புறுத்தி கடன் செலுத்த வைக்கிறாரகள். 1980 மற்றும் 1990-களில் மூன்றாம் உலக நாடுகள் ஏற்றுமதியை பெருக்கியது. அத்தியாவிசிய சரக்குப் பொருள்களுக்கான சந்தை நிரப்பப்பட்டு விலை, வருமானம் மற்றும் ஏற்றுமதி வருவாயும் சரிந்தது. இந்த நிலையில் உள்ள நாடுகளிடம் கடன் கேட்டு அரசுடன் இணைந்த வளர்ச்சியை ஏகாதிபத்தியம் தடுத்தது. மூன்றாம் உலகிற்கு உற்பத்தியும் போட்டியும் தேவையானது மற்றும் இதனால் அவர்கள் கடனை எளிதாக அடைத்திருக்க முடியும். இதற்கிடையில் ஏகாதிபத்தியங்கள் மூன்றாம் உலக நாடுகளின் வளங்களையும், சரக்கு மற்றும் உழைப்பையும், இறையாண்மையையும், மக்கள் ஜனநாயகத்தையும், தேசிய வளர்ச்சியையும் எடுத்துக் கொள்வதன் மூலம் வளர்ச்சியை தடுத்து நிறுத்தியது.

முடிவுக்கட்டத்தில் உள்ள முதலாளித்துவம் தனது அரசியல் மேலாதிக்கத்தை மட்டும் தான் தவறாக பயன்படுத்த இயலும். அனால் சரிகின்ற பொருளாதார வளர்ச்சி, உற்பத்தி வளர்ச்சி மற்றும் முதலீட்டை மாற்ற இயலாது. முதலாளித்துவம் துயரமாக வரிசெலுத்த மறுக்கிறது, கூலி அல்லது பொருள்களின் விலை கட்டாய தேவைகளை மோசமாக்கி சமத்துவமின்மையை அதிகரித்து உள்ளது, தனது தொழிற்சாலைகளை குறைந்த கூலி கிடைக்கும் இடங்களுக்கு மாற்றி உள்ளது.

மோசமானது எதுவென்றால் உற்பத்தியில் முதலீடு செய்யாதது, குறிப்பாக ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்தி இல்லா வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. அமெரிக்கா இந்த நடவடிக்கைகளை எளிதாக்குகிறது. 1971-ன் அளவில் வணிக நடவடிக்கைகளில் இருந்து தங்கத்தை விலக்கி டாலரால் வகுக்கப்பட்ட வணிகத்தை ஊக்கப் படுத்தியதால் டாலருடைய மதிப்பும் தேவையும் உயர்ந்தது. உயர்ந்து கொண்டிருந்த கடன் மற்றும் சொத்துக் குமிழிகள்(அசெட் பப்பிள்ஸ்) பணத்தை உழைக்கும் மக்களின் கைகளில் இருந்தும், சிறு வியாபாரிகளிடம் இருந்தும், அரசு மற்றும் வரி செலுத்துவோரிடம் இருந்தும் உறுஞ்சி இருக்கின்றது, சில பிரமுகர்களிடம் வளம் பெருகி இருப்பதற்கான காரணம் அரசுகள் நிதி நெருக்கடி காலங்களில் கடன் கொடுப்பவர்களுக்கே சாதகமாக இருக்கின்றன.

தகவல் தொழில்நுட்பம் (ஐ.சி.டி) மிகப்பெரிய எதிரிடையான பங்காக இவை அனைத்திலும் இருந்திருக்கிறது. சோசியலிச சகாப்தத்தில் சோதனை தன்னாள்வியல்(எஸ்பிரிமெண்டல் சைபெர்னாடிக்ஸ்) தகவல் தொழில்நுட்பம் ஜனநாயக சோசியலிச பொருளாதார மேன்மை திட்டமிடலுக்கும் உபயோகப்படும் ஆற்றலாக கண்டது. புதிய தாராளவாத பொருளாதாரம் இந்த ஆற்றலை உற்பத்தியை தொலைவில் இருந்து கட்டுப்படுத்த, மூலதனத்தை மத்தியப்படுத்த மற்றும் குவிக்க உதவ, கொள்ளையடிப்பதற்காகவும் நிதிமூலதன குருட்டு ஆதாய வேட்டைக்காகவும், நிலங்களையும் வளங்களையும் எடுத்துக் கொள்ளவும், வேலை செய்பவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவும் வாடிக்கையாளர்களை கையாள்வதற்க்காகவும், தேவை சார்ந்த சிக்கல்களை அணுகாமல் குறுகிய பாதையை தேர்வு செய்து போலியான தேவைகளை பெருக்குவது போன்றவற்றுக்கு உபயோகப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மூலதனங்கள் மனித நல்வாழ்வை, வேலைகளின் அளவு மற்றும் தரம் மற்றும் சமூக சேவைகளை நலிவடைய செய்திருக்கிறது.

புதிய தாராளவாத முதலாளித்துவம் மெதுவான வளர்ச்சிக்கு அப்பால் சுற்றுசூழல் மாசு, காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு மற்றும் பண்ணை விலங்குகள் மீதான கொடூரம் என பூமி மனிதனுக்கு அளித்த பரிசுகள் லாபமாகவும் கொள்ளையாகவும் மாறியுள்ளது.

அறிவுசார்ந்த அரசு மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் எடுக்க குறிப்பிடும் போது, முதலாளித்துவதின் லாபம் சார்ந்த சந்தையால் இயக்கப்படும் தீர்வுகள், நிலையை மோசமடைய செய்துள்ளது.

.புதிய தாராளவாதம் ஒவ்வொரு பத்தாண்டுகளும் வளர்ச்சியை மோசமடைய செய்கிறது மற்றும் 2008-க்கு பின் வளர்ச்சி பெரும் வீழ்ச்சி காலத்தில் இருந்ததை விட குறைந்துள்ளது. 2010-க்கு பின் துல்லியமாக நோக்குபவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி புதிய தாராளவாத தலைவர்களால் உற்பத்தி முறையில் வரும் என எதிர்பாக்கப்பட்டது. அமெரிக்காவிலும் பிரிட்டினிலும் போராட்டங்களும் சமூக அமைதியின்மையும் பெருகியது. பெருந்தொற்று அதை தூண்டிவிட்டுள்ளது, புதிய தாராளவாதம் தற்பொழுது அம்பலப்பட்டு மோசமான நிலையில் உள்ளது.

பொருளாதாரத்தை மீட்க சுற்றுசூழல் அபாயங்களையும் பெருந்தொற்றையும் தொழிற்ச்சாலை கொள்கை மூலம் கட்டுப்படுத்த வேண்டும். அரசு முதலீடு, சமூக பங்கீடு, சுற்றுசூழல் திட்டமிடல் மற்றும் மருத்துவ கட்டமைப்பு போன்றவை சோசியலிசத்திற்கு ஒப்பிடும் அளவில் அமைக்கப்பட வேண்டும், அரசு மற்றும் கொள்கைகளை முதலாளிகள் கட்டுப்படுத்த கூடாது.

அதற்கான பாதை அகலமாக திறக்கப்பட்டு இருக்கிறது. புதிய தாராளவாதத்தின் அதிருப்தி பரவலாகவும் ஆழமாகவும் இருக்கிறது, குறிப்பாக ஒரம்கட்டப்பட்ட இனம், பாலினம் மற்றும் பிற வழிகளில் நடக்கிறது.

## இடது துறவும் ஜனரஞ்சகவாதமும்

உழைக்கும் மக்களின் வரலாற்று சிறப்புமிக்க கட்சிகளும் சங்கங்களும் இந்த அதிருப்தியை திரட்டுவதில் தோல்வி அடைந்துள்ளன.

பெரும்பாலான தொழிற்சங்கங்களில் முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவ பலநாட்டு மற்றும் தேசிய நிறுவனங்களிடம் வர்க்க உடன்பட்டன, ஐரோப்பிய தொழிற்சங்க கூட்டமைப்பு(இ.டி.யூ.சி) மற்றும் சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்பு(ஐ.டி.யூ.சி) ஆகியவற்றின் செல்வாக்குக்கு இணங்க வர்க்க உடன்பாட்டுக்கு வந்தது. புதிய தாராளவாதத்தின் அடக்குமுறையின் கீழ் இப்படிப்பட்ட தொழிற்சங்கங்கள் சுருங்கியது, உலகம் நிலையில்லாது இருந்த போது மக்களை ஒருங்கிணைக்க தவறியது. எனினும், பல வகையான வேர் அமைப்புகள் பெருகியிருக்கின்றன, உலக தொழிற்சங்க கூட்டமைப்பு போன்ற அமைப்புகள் பாசிச மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களின் வாரிசாகும், இந்த இயக்கம் தற்பொழுது ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாகவும் சோசியலிச இயக்கமாகவும் திகழ்கிறது, இது 135-நாடுகளில் உள்ள 120 மில்லியன் உழைக்கும் மக்களை ஒன்று சேர்க்கிறது.

உழைக்கும் மக்களின் வரலாற்று சிறப்புமிக்க அமைப்புகள் மோசமான பலனை அடைந்துள்ளது. வலதுசாரி கட்சிகள் புதிய தாராளவாதம் பக்கம் திரும்பிய போது பல காட்சிகள் அதனை பின்தொடர்ந்தன, இதனால் இவை தன்னுடைய தொழிலாளர் இணைப்பை சில கசப்பான போராட்டங்களுக்கு பின் தகர்த்தியது. இந்த மாற்றங்கள் மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவிழும் மூன்றாம் உலகநாடுகளிலும் நடந்து இருக்கின்றது.

படித்த அறிவுஜீவிகள் கட்சியை இந்த பாதைக்கு இட்டுச் சென்றுள்ளனர். முன்பு கட்சிகள் தொழிலாளர் போராட்டங்களையும் அறிவுஜீவி குழுக்களையும் இணைத்தது. கடந்த சில பத்தாண்டுகளாக டோனிபிளைர் மற்றும் கிளின்டன் போன்ற அரசியல்வாதிகள், தொழிலாளர்களுக்கான காட்சிகளை வளர்த்து ஆதிக்கம் செலுத்தி உலகமயமாக்கல் என்ற தலைப்பின் கீழ் புதிய தாராளவாதம் பக்கம் திருப்பி இருக்கின்றன. போருக்கு பின் பொது மற்றும் பெருநிறுவன அதிகாரங்களுக்கு நற்சான்று பெற்ற ஆட்கள் தேவையால் தொழில்முறை நிர்வாகிகள் அடுக்கை விரிவு செய்தனர். புதிய தாராளவாதத்தின் அடியில் உற்பத்தியை வெளியிருந்து இயக்கம், மதியப்படுத்தப்பட்ட நிர்வாகம், பொறியியல்,

வடிவமைப்பு, சட்டம் சார்ந்தவைகள், சந்தைப்படுத்தல், விளம்பரம், நிதி மற்றும் இதர செயல்பாடுகள் மேற்குலக நாடுகளில் இந்த அடுக்குகளை விரிவடைய செய்தது. இந்த தொழில்முறை நிர்வாகிகள் அடுக்கு உழைக்கும் மக்களுக்கு மேல் பல சலுகைகளை அனுபவித்து வருகிறது, கூடவே பொது மற்றும் தனியார் வளங்களை அனுபவிக்கிறது. இந்த புதிய தாராளமய அமைப்புகள்- தேர்ந்து எடுக்கப்பட்ட அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் என்.ஜி.ஓ கள் -போன்றவர்கள் இந்த அடுக்கில் இருந்து வருபவர்கள். இவர்களது தொழில்முறை மற்றும் குடும்ப இணைப்புகள் கட்சியை தாண்டி இருக்கிறது, இவை புதிய தாராளமய கொள்கைளை எதிரொலிக்கிறது. போர்ட் பௌண்டேசன் மற்றும் உலக சமூக மன்றம் இந்த கொள்கைகளுக்கு நிதி அளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. டோனி பிளேயைர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் கட்சிகளின் நிதிநிலைகளை வரைவு செய்தனர், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அரசு நிதிநிலையை சார்ந்த அரசியல் கட்சிகளும் அறக்கட்டளைகளும் புதிய தாராளவாதத்தால் தவிர்க்க இயலாதவாறு பிணைந்து இருக்கிறது.

கட்சி வேறுபாடுகள் வாக்கு சேகரிக்கத்தான். வலதுசாரிகள் இயற்கையாகவே குட்டி முதலாளித்துவவாதிகளின் பிற்போக்கு குணம் கொண்டவர்கள், வரலாற்று சிறப்பு மிக்க உழைக்கும் மக்கள் கட்சிகள், தற்பொழுது தொழில்முறை நிர்வாகிகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு புதிய தாராளவாதத்தோடு சமூக தாராளவாத வாழ்க்கையை இணைந்திருக்கிறது.

சமூக தாராளவாதம் தனிநபர் போராட்டங்களில் தான் கவனம் செலுத்தும், குறிப்பாக ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருந்து உயர்ந்தவர்கள்- பெண்கள், சிறுபான்மையினர், பாலின சிறுபான்மையினர் மற்றும் நிற சிறுபான்மையினர். சமூக தாராளவாதம் தலைப்பு செய்தியில் வரும்" கலாச்சார போர்களின் பிரதியாகும், இவை பெரும்பாலான உழைக்கும் வெகுமக்களை நிராகரித்து இருக்கின்றது, அவர்கள் சமமற்ற முறையில் வளர்ந்திருக்கின்றன, வேலை அல்லாத மற்றும் நிலையற்ற வேலை, அவர்களுடைய வாழ்வாதாரம் உயரவில்லை, இவை புதிய தாராளவாதத்தோடு சேரும் போது நிலை மோசமாகிறது. இதனால் தான் பரம்பரிய சமூக ஜனநாயக காட்சிகள் தனது ஆதரவை இழந்துள்ளன.

இந்த தொழில்முறை அடுக்குகள் சந்திப்பு, மாநாடு, மன்றங்கள், ஊடக விவாதங்கள் மற்றும் தேர்தல் பிரச்சாரம் போன்றவற்றில் எவ்வாறு வெகுமக்கள் அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் அக்கம்பக்கத்தில் கூட்டம் சேர்க்கிறார்கள் என பேசுவதை விரும்புகிறார்கள். அதே நேரத்தில் உழைக்கும் மக்கள் குறைந்த கூலி, அவர்களுடைய பொருள்களுக்கு குறைந்த விலை, வேலையின்மை, ஒடுக்கப்பட்ட மற்றும் நிலையற்ற வாழ்க்கை ஆகியவற்றால் தங்களின் கூட்டு உரிமைகளுக்கு சோசியலிசத்தை எதிர்பார்க்கிறனர். மக்கள் வருமானம், பாலினம், இனம், திறமை மற்றும் பிற சமூக கோடுகள் மற்றும் அரசியல்ரீதியாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன, அரசியல் ரீதியாக இடது பிற்போக்கு வாதிகள் மற்றும் வலதுசாரிகளுக்கு இடையிலான கலாச்சார போர்களால் குழப்பம் அடைந்து இருக்கிறார்கள், உண்மையான புரட்சியாளர்கள் மற்றும் தலைவர்களை சூனிய வேட்டை ஆடப்படுகின்றன.

.புதிய தாராளவாதத்தால் உருவாக்கப்படும் அதிருப்தியால் இரண்டு வலதுசாரிகளாலும் இடதுசாரிகளாலும் வெகுமக்களை திரட்ட முடிகிறது. டிரம்ப், போல்ஸானரோ மற்றும் மோடியின் வலதுசாரி அரசியல் மற்றும் கார்பின் அல்லது மதுரோவின் இடதுசாரி அரசியல் ஆகியவை அனைத்தும் சமூக பிளவுகளில் கவனம் செலுத்துவதாக குற்றம் சாட்டப்படுகிறது. வலதுசாரி அரசியல் சமூக பிளவுகளை தனது லாபத்திற்க்காக உபயோகிக்கிறது ஆனால் இடதுசாரி அரசியல் புதிய தாராளவாதத்தால் உருவாக்கப்பட்ட சமூக பிளவுகளை மாற்றி குணமடைய வைக்கிறது. அதைவிட மோசம் ஏதுவானால், அரசியல் ஸ்தாபனங்களின் சமத்துவம் என்பது கற்பனையானது: இவர்களால் டிரம்ப் அலுவலகத்தை பிடிப்பதை பொறுத்துக்கொள்ள முடிகிறது, ஆனால் முற்போக்குவாதிகள் அலுவலகத்திற்கு செல்லப்படுவது தடுக்கப்பட்டு வேட்டையாடப்படுகின்றன.

மக்களின் பொதுவான பிரச்சனைகள் விவாதிக்கப்படுவதில்லை. பெருவாரியான முதலாளித்துவ நாடுகள்- மூன்றாம் உலக நாடுகள், முன்பு கம்யூனிச நாடுகளாக இருந்த நாடுகள் மற்றும் தொழிற்சாலைகள் மூடப்பட்ட மேற்குலக நாடுகள்- புதிய தாராளவாதத்துக்கு

எதிராக இருக்கிறது, அரசியல் ஸ்தாபனங்கள் சிறிதளவு இணங்குதலை கூட தவிர்க்கிறது, இதனை எதிர்ப்பவர்கள் சிறிதளவு அல்லது அரசியல் தெளிவு அற்று போவார்கள்.

இந்த பொருளாதார சரிவானது நடுத்தர வர்க்கத்தின் வாழ்க்கையை பாதித்து இருக்கிறது, படித்த இளைஞர்கள் மற்றும் பழைய மேலாளர்கள் இந்த நிலையால் பாதிக்கப்பட்டு உள்ளனர். அச்சுறுத்தும் வகையில், ஜெர்மனி உள்நாட்டுப் போரில் நடந்தது போன்று`நடுத்தர வர்க்கம்` வலதுசாரி கருத்துக்களால் தூண்டப்படுகின்றன. புதிய தாராளவாதத்துக்கு எதிராக பல கிளர்ச்சிகள் உடனடியாக நடத்தப்படுவது உழைக்கும் மக்களின் விடாப்பிடி தனத்தை காட்டுகிறது, உதாரணமாக பிரெஞ்சு"யெல்லோவ் வெஸ்டஸ்". 1991-க்கு பின் கம்யூனிசத்தின் அரசியல் மற்றும் தார்மிக நெருக்கடிகள் மற்றும் தலைவர்களின் துரோகம், தொழில்முறை ஆட்களை (ப்ரோபேஷனல்ஸ்) மக்கள் சேவைக்காக அதிகாரத்தில் அமர்த்தியது மிகப்பெரிய தவறாகும். கற்பனையான ஒற்றுமைகள்- நிறவாதம், மதவாதம் மற்றும் இனக்குழு வாதம்- பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக பாதிக்க பட்டவர்களை திருப்பி உண்மையான எதிரியை மறைத்து விடுகிறது.

இன்று வர்க்க போராட்டங்கள் இடதுசாரிகளால் நடக்காமல் இடதுசாரிகளுக்குள் நடந்து கொண்டு இருக்கிறது.

எதுவாக இருந்தாலும் பொருளாதார நெருக்கடிகள் முற்றும் போது புதிய தாராளவாத ஸ்தாபனங்கள் தன்னுடைய அரசியல் பிடியை இழக்கின்றன, குறிப்பாக சர்வதேச பரப்பில் சோசியலிச சமுதாயங்கள் முதலாளித்துவ சிதைவுகளை முன்னிலை படுத்துகின்றன.

## புதிய தாராளவாதம் மற்றும் மேற்குலகத்தின் வீழ்ச்சி

புதிய தாராளவாதத்தால் உழைக்கும் மக்களின் பிரமிப்பையும் அதிர்ச்சியையும் தாங்கிக்கொள்ள இயலாது. மூன்றாம் உலக நாடுகள், சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சோசியலிசத்தை தாக்கினாலும், புதிய தாராளவாத சிந்தனைக்கும் உண்மை நிலைக்குமான இடைவேளை பெருகிக்கொண்டே போகின்றது. இது பதிலடிகளால் தன்னுடைய உண்மையான தாட்சர்-ரீகன் உருவத்தை மாற்றி 1990-களில் உலகமயமாக உருக்கொண்டிருக்கிறது. 2000-களில் அமெரிக்க "பேரரசு", 2010-களில் ஆஸ்டெரிட்டி.

மேற்குலகம் சோவியத் ஒன்றியத்தின் சவப்பெட்டியின் மீது ஆடிய போது, அமெரிக்கா மாநில துறையின் தத்துவவாதி பிரான்சிஸ் புக்குயாமா வரலாறு முடிவடைந்தது என்றார். மனிதர்கள் தன்னுடைய இறுதி இலக்கை அடைந்து விட்டனர்: முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு மேல் வரலாறு நகராது, ஒருமுனை அதிகாரம் மற்றும் அமைதிப்பங்கீடு, இதைத்தான் உலகம் எதிர்பார்கிறது என்றார். ஆனால், வரலாறு வேறு யோசனைகளை கொண்டிருந்தது.

## ஒருமுனை அரசியல் பொருளாதார அதிகாரம்

உலகம் ஒருமுனைக்கு எதிராக பல முனையை நோக்கி நகர்கிறது. புதிய தாராளவாதம் மேற்குலக நாடுகளை மெதுவான வளர்ச்சியில் முடக்கி இருக்கிறது, உலக பொருளாதாரத்தின் புவியீர்ப்பு மைய்யம் வேகமாக வளர்கின்ற சோசியலிச சந்தை பொருளாதாரத்தையும் சீனாவையும் மற்றும் வளரும் முதலாளித்துவ நாடுகளாக இருந்தாலும் சந்தை அடிப்படை வாதத்தில் இருந்து மீண்டு வந்துள்ள நாடுகளான இந்தியா, பிரேசில் மற்றும் ருஷ்ய பக்கம் திரும்பி இருக்கின்றது.

2010-ல் இந்த நாடுகள் சர்வதேச ஆட்சிமுறைகளில் மாற்றங்களை கொண்டு வரவேண்டிய தேவையை எழுப்பின, இதில் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் அடக்கம். மேற்குலக நாடுகள் இதற்கு மறுத்த போது சீனா புதிய ஒன்றை தொடங்கியது. அவை ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, ஷாங்காய் கூட்டுறவு அமைப்பு, புதிய வளர்ச்சி வங்கி மற்றும் பொலிவியரன் அலையன்ஸ் பார் பீப்பிள்ஸ் ஆப் அமெரிக்கா. சீனாவும் ருஷ்யாவும் ஐரோப்பிய- ஆசிய ஒருங்கிணைப்பு சீனாவின் வளர்கின்ற பொருளாதாரத்தை புவி ஈர்ப்பாய் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது-

மூன்றில் இரண்டு பங்கு உலக நாடுகள் அமெரிக்காவை விட சீனாவிடம் வணிகம் செய்கின்றன, அதனுடைய பெல்ட் அண்ட் ரோட் மற்றும் ருஷ்யாவின் ராணுவம் ஆகியவை அண்டை நாட்டு பொருளாதார மற்றும் பாதுகாப்பு தேவைகளை பூர்த்திசெய்கின்றன. இதன் விளைவாக உலக மக்கள் தொகையில் 1/3 பங்கு மக்கள் மற்றும் 1/2 சதம் பரப்பளவு கொண்ட ஐரோப்பிய-ஆசிய துருவம், சீனா-சோவியத் பிரிவால் ஏற்பட்ட அழிவில் இருந்து மீண்டு வந்துள்ளது.

ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் மேற்குலகத்தை எதிர்ப்பதில் உறுதியாக உள்ளனர். லத்தீன் அமெரிக்க இடது சாரிகளின் "இளஞ்சிவப்பு அலை" அமெரிக்காவின் முயற்சிகளுக்கு இணங்க மறுத்துவிட்டது.

ஆப்பிரிக்கா மற்றும் லிபியாவில் சிறிது பின்னடைவு இருந்தாலும் தேசியவாதிகள் மற்றும் இடதுசாரிகள் முந்தய பிரெஞ்சு நாட்டின் ஆப்பிரிக்க காலணிகளை பிரெஞ்சு சி.எப்.ஏ வின் புதிய காலணிகளுக்கு எதிராக வெகுமக்களை திரட்டி இருக்கிறன. இவர்கள் மத்திய ஆப்பிரிக்க குடியரசின் மீதான பிரெஞ்சு ஆக்கிரமிப்பை எதிர்த்து, ருஷ்ய மற்றும் ரவாண்டன் நட்டு படைகளை பாதுகாக்க தேர்தல்களை ஏற்பாடு செய்தன.

எஸ்.ஏ.டீ.சி நாடுகள் பிரிட்டானியர்களால் ஜிம்பாப்வே மீது நடத்தப்படும் ஆட்சி கவிழ்ப்பை எதிர்க்கின்றன, அதே நேரத்தில் சில நேச நாடுகள் மொசாம்பிகேவை ஐ.எஸ்.ஐ.எஸ் ஆல் வடக்கில் நடத்தப்படும் கிளர்ச்சியை தடுக்க உதவுகிறது. இவை அனைத்தும் ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவை சார்ந்த புரட்சி குணமிக்க ஆண்கள் மற்றும் பெண்கள் எதற்காக போராடினார்களோ அவை திரும்ப வந்துள்ளது, அவர்களால் இடப்பட்ட விதை இன்று வளர்ந்து வருகிறது.

## அமைதி பங்கீடு?

அமைதி பங்கீடு கூட உருவெடுக்க தவறி இருக்கிறது. அமெரிக்கா தனது குறுகி வரும் மத்திய பொருளாதாரத்தை ஈடுகட்ட ராணுவ ஆக்கிரமிப்பில் இறங்கி இருக்கிறது. போர்கள் பெருகி இருக்கின்றன. மனித உரிமை, ஜனநாயகம் மற்றும் நாடுகளின் மக்களை தோல்வியுற்ற அரசுகளிடம் இருந்து காப்பாற்றும் கடமை போன்ற முழக்கங்களை ஒட்டி இவை நடக்கிறது. இவை ஜனநாயகத்தை முன்னெடுக்கவில்லை, புதிய தாராளவாத முதலாளிதுவத்தை முன்வைத்து ஏழை நாடுகளை ஏகாதிபத்தியங்கள் சுரண்டுவதற்க்கு வழிவகை செய்திருக்கிறது. இது மனித உரிமை மீறல்களையும் அடிமைமுறையையும் கொண்டது- வாழ்விற்க்கும் மற்றும் வளர்ச்சிக்கும். இவர்களுடன் இணக்கமற்ற நாடுகளான சிரிய, கியூபா, வெனிஸூலா,ஏமன் போன்ற நாடுகளை தண்டித்து உள்ளது, குறிப்பாக ஏமனுக்கு போகும் மருந்துகளை, எண்ணெய் மற்றும் உணவுகளை தடுத்திருக்கிறது .

இவை போர்கள் ஓயாதவை என நிருபித்து இருக்கின்றன. நிதிமயமாக்கப்பட்ட மற்றும் தொழிற்சாலைகள் மூடப்பட்ட மேற்கு உலகம் ஆயுத உற்பத்தி தொழிற்ச்சாலைகளின் வீடாக உள்ளது, போர்கள் அவர்களின் தொழிற்சாலை கொள்கைகள். அதனால் அழிக்க மட்டும்தான் முடியும் மீண்டும் உருவாக்க முடியாது, போர்களை முடிந்தவரை நடத்தி ஆயுதங்களை சோதித்து வியாபாரம் செய்கிறார்கள், அமெரிக்காவால் வழிநடத்தப்படும் மேற்குலகம், காரிச்சன் நாடுகளான இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவியை கொண்டு எந்த

வெற்றியையும் அடைந்தது இல்லை. அவர்கள் அழிவிற்க்கான சோதனைகளை மட்டுமே விட்டு சென்றிருக்கிறாரகள்.

உயர்கின்ற ராணுவவாதம், அடக்குமுறை, வரியநிலை மற்றும் சுற்றுசூழல் அழிப்பு புலம்பெயர்வர்கள் அலையை உருவாக்கி, எல்லைக் கட்டுப்பாடுகளால் மேற்குலகம் அவர்களை மேலும் ஒடுக்குகிறது, அதனால் அவர்கள் பக்கத்து நாடுகளுக்கு அனுப்பப் படுகிறார்கள். பெர்லின் சுவர் வீழ்ந்தாலும் அதில் இருந்து 100 சுவர்கள் முளைத்திருக்கிறது. இவை பேச்சு சுதந்திரம், உண்மையை கூறல், போராட்டங்கள் மற்றும் உண்மை தகவல்களை தெரிவித்தல் ஆகியவற்றை குறைந்திருக்கிறது. மனித உரிமை மீறல்கள் வாடிக்கையாகி விட்டது.

இது மூன்றாம் உலக நாடுகளில் மட்டும் அல்ல மேற்குலக நாடுகளில் உள்ள மாநகரங்களான மீனெப்போலிஸ் அல்லது பாரிசிலும்ம இதே நிலை தான்.

அமைதி மற்றும் வளர்ச்சி, சமூகநீதி மற்றும் சம உரிமை இல்லாமல் எப்படி மனித உரிமையை பாதுகாக்க முடியும்?. அரசுகள் மற்றும் மக்கள் எப்படி இறையாண்மையை பல்முனை அரசியல் பொருளாதார தன்னிச்சைகள் இல்லாமல், மரியாதை மற்றும் நற்பெயருக்கு கலங்கம் இல்லாமல் பாதுகாப்பது. சீனா, கியூபா, மற்றும் நிக்கராகுவா போன்ற நாடுகள் இது போன்ற மனித உரிமைகளை நிலைநாட்ட நினைக்கிறது.

முதலாளித்துவம் மனிதத்துவத்துக்கு எதிராக குற்றம் செய்கிறது. கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரங்கள் செய்கிறது, மக்கள் சோசியலிசத்தை நோக்கி நகர்வது மனித உரிமைகளை காக்கும் என்பதால் அவர்களை தடுக்கிறது- பேச்சுரிமை, மதம் அல்லது மானத்தோடு வாழ்தல், உடல்நலம் மற்றும் கலாச்சார ரீதியிலான வளமான வாழ்க்கை.

இவைதான் பெருந்தொற்று காலத்தில் மேற்குலக பொருளாதாரம், சமூகம், அரசியல் மற்றும் சர்வதேச அரசியல் ஆகியவற்றின் ஆபத்தான நிலை.

## பெருந்தொற்றின் அழுத்த சோதனையில் முதலாளித்துவமும் சோசியலிசமும்

முன்னறிவுப்புக்கு அப்பால் தயார் நிலையில் இல்லாமை, ஆரம்பத்தில் அதன் தீவிரத்தன்மையை அறியாமை ஆகியவற்றால் பணக்கார நாடுகளின் ஏழைகள் மற்றும் பணக்காரர்கள் பெருந்தொற்றால் தாக்கப்பட்டனர். சமூக மற்றும் சுகாதார உற்கட்டமைப்புகள் ஏற்கனவே நிதி குறைப்பால் வலுவற்று இருக்கும் நிலையில், அனைத்தும் மேற்குலக ஏழைகளின் மீது விழுந்தது. பூர்த்தி செய்யப்படாத தேவைகளால் கோவிட் மேல் நோக்கி உயர்ந்தது. அரசுகள் வாழ்வை காப்பதா இல்லை வாழ்வாதாரத்தை காப்பதா என அறியாது இருந்தன, உண்மையில் அவர்கள் மக்களை முதலாளித்துவ லாபத்திற்காக பணயம் வைத்தனர்.

அமெரிக்காவில் அரசு அதிகாரிகள் மயக்கத்தில் இருக்கும் நிதி சந்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தது இதுவரை இல்லாத அளவு இருந்தது. சில புதிய தாராளவாத அரசுகள் உயிரிழப்புகளை கண்டுகொள்ளாது நோய்த்தொற்றால் மக்கள் கூட்டாக எதிர்ப்பு சக்தியை வளர்த்து கொள்வார்கள் என கேலி செய்தனர். மக்கள் குமுறல்கள் இதனை தடுத்து நிறுத்தின, லாபம் குறைக்க வைக்கின்ற ஊரடங்குகள் அமலுக்கு வந்த வேளையிலும் உள்ளிருப்பு சிகிச்சை அளித்தலை அரசு குறைத்தது, இது முன்பிருந்த கொலைகார நடவடிக்கைகளில் இருந்து பெரிதாக வேறுபடவில்லை.

பல ஆண்டுகளாக மருந்துகளை பெருநிறுவனங்கள் சந்தை பொருளாக்கி வருகின்றன, புதிய தாராளவாத அரசுகள் சுகாதார அமைப்புகளை தூக்கி நிறுத்தவில்லை அல்லது சமூகம் சார்ந்த மருத்துவ பாதுகாப்பு சோதனை, தடமறிவது மற்றும் தொற்றுக்கு உள்ளானவர்களை தனிமைப்படுத்தி தொற்றை தடுக்க உதவிகள் என எதையும் சரியாக செய்யவில்லை.

இதற்க்கு பதிலாக அரசியல்வாதிகள் தங்களுடைய முதலாளி நண்பர்களுக்கு லாபத்தை பெருக்குவதற்கான வாய்ப்புகளை சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் சேவை என்ற பெயரில் செய்தன. இதற்கிடையில் ஊரடங்குகள் தவிர்க்க இயலாது நீடிக்கப்பட்டு பொருளாதாரம் சரிந்து கோடிக்கணக்கான உயிர்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்தியது.

தயக்கம் நிறைத்த ஊரடங்கு சுழற்சிகள் மற்றும் ஆரம்பகட்ட தளர்வுகளால் புதிய தாராளவாத நாடுகளில் "முன்னணி" தொழிலாளர்களுக்கு தொற்றில் இருந்து பாதுகாப்பற்ற நிலையில் இருந்தனர் மற்றும் நம்பிக்கை அற்ற அரசாங்க தொடர்புகள் இறப்புகளையும் தொற்று எண்ணிக்கைகளையும் பதிவு செய்வதிலும் தடுப்பூசி செலுத்துவதிலும் கட்டுப்பாடுகளை கடைபிடித்தது.

பணக்கார நாடுகள் சில பண உதவிகளை செய்தன (தேவையை அதிகரிக்க மக்களுக்காக அல்ல), இவை கடன் பெற்ற ஏழை நாடுகளில் சாத்தியம் இல்லை, பெருந்தொற்றால் நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

ஏற்கனவே சமூக பிளவுகள் ஆழமாகி உள்ளன. அதிக வருமானம் வாங்குபவர்கள் வீட்டில் இருந்து வேலை செய்கிறார்கள், இவர்கள் முழு வருமானத்துடன் குறைந்த செலவுகளால் கடன்களைக் கூட அடைத்துள்ளனர். நிதி சந்தை அதற்க்கு கிடைத்த உதவிகளால் இதுவரை இல்லாத அளவு உயர்ந்துள்ளது, பணம் நிறைந்த பிரமுகர்கள் மற்றும் பணக்காரர்கள் மேலும் வளங்களை சேர்த்துள்ளனர்.

உழைக்கும் மக்கள் முக்கியமாக நிலையில்லாத வேலையுடைய பெண்கள், இன சிறுபான்மையினர் மற்றும் பிற பாதிக்கப்பட்ட குழுக்கள் ஏழ்மை, வேலையின்மை, தனிமை படுத்தப்படல், சேமிப்புகளை இழந்து இருத்தல், கடன் மற்றும் வெளிப்படையான விரக்திக்கு உள்ளதால் அல்லது குறைத்த வருமானம் உடைய முன்னணி தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்து தொற்றுக்கு உள்ளாகி உடல்நலக்குறை மற்றும் இறப்புக்கு உள்ளாகியுள்ளன. ஏழை மக்களுக்கு சுகாதார பாதுகாப்பு இல்லாமை, கூட்டம், ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில், தரமற்ற வீடு அல்லது வீடு இல்லாமை ஆகியவை தொற்றுக்கு உள்ளாகும் அபாயத்தையும், இறப்பு மற்றும் நோய்களையும் அதிகரித்து உள்ளன. பல சங்கங்கள் இவர்களை சரியாக பிரதிநிதித்துவப் படுத்துவது கிடையாது, மற்றும் சந்தர்ப்பவாத முதலாளிகள் இவர்களின் உடல்நலத்தை காப்பதில்லை. இந்த அவலநிலை கண்டு கொள்ளப்படாமல் இருக்கிறது.

குழந்தை பெற்றுக் கொள்பவர்கள் ஆண்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் இளைஞர்களுக்கு, நோயுற்றவர்களுக்கு மற்றும் குறைத்த வருமானம் உடையவர்களுக்கும், பெண்களுக்கும் பெருந்தொற்றுக்கும் ஊரடங்குகளுக்கும் அப்பால் நிலை மோசமடைந்துள்ளது. குழந்தைகள் பாதுகாப்புக்கான தேவைகள் பள்ளிகள் மற்றும் பாதுகாப்பு மையங்கள் மூடியதன் காரணமாக தனது வேலையை கோடிக்கணக்கான பெண்கள் கைவிட்டனர். பெண்களால் பராமரிக்கப்படும் வீடுகள் பெரும் அடி வாங்கியுள்ளது. சுகாதார பாதுகாப்பு மையங்கள் சரிந்த பொழுது, கோடிக்கணக்கான பெண்கள் கருத்தடை செய்ய வழியில்லாமல் மற்றும் ஊரடங்குகளால் பலர் வீட்டை சார்ந்த வன்முறைகளுக்கு ஆளாகியுள்ளனர்.

பிற ஓரங்கட்டபட்ட குழுக்களும் பாதிக்க படக்கூடிய நிலையில் உள்ளன. அரசாங்கங்களின் பொய் தகவல்கள் மற்றும் வலதுசாரி சிறுபான்மையினர பலி ஆடாக்கும் நடவடிக்களுக்கு, வடக்கு அமெரிக்காவில் கிழக்கு ஆசியர்கள் மற்றும் இந்தியாவில் முஸ்லீம்கள் பலியானார்கள் -சிறுபான்மை மக்கள் வெறுப்பு பேச்சுகளாலும் வன்முறையாலும் பாதிக்கப்பட்டனர். வேலை இடங்களில், வீடுகளில், சுகாதார பாதுகாப்பு மற்றும் சமூகசேவையில் பாலின சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் அதிகமாகி, அவர்கள் உடல்நலப் பாதுகாப்பு இன்மைகளுக்கு உள்ளாக்கி இருக்கின்றன.

இறுதியாக தனிமைப்படுத்தல் மற்றும் சமூகத்துடன் சேர்ந்து செயல்படுதளின் பற்றாக்குறை, பாதிக்கப்பட்ட கல்வி மற்றும் தேர்வுகள் என இவை குறிப்பாக இளைஞர்களை பாதித்து உள்ளது. கணினி, மின்சாரம் மற்றும் இணைய வசதி அல்லாத மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டு உள்ளது. மோசமான வேலைவாய்ப்புகள் மற்றும் வேலைக்கே மீண்டும் செல்ல இயலாத நிலை ஏற்பட்டு அவர்களின் நம்பிக்கையை சிதைத்துள்ளது.

இதற்க்கு மாறாக சீனாவின் சோசியலிச அமைப்பு அதிர்ச்சி தரக்கூடியவையாக இருக்கிறது. இது வளரும் நாடாக இருந்தாலும் சுகாதார கட்டமைப்பை ஈர்க்கக்கூடிய வகையில் வைத்துள்ளது. மக்களின் வாழ்வை முன்னிறுத்தி இருக்கிறது சீன கம்யூனிஸ்ட் கட்சி - அனைத்துவசதிகளும் உள்ள மருத்துவமனைகள் அல்லது சுகாதார பாதுகாப்பு பணியாளர்களை திரட்டி வூஹான்-னுக்கு அனுப்பியது- சீனா தொற்றை நசுக்கி உயிர்களை காத்து, தற்பொழுது செருக்குடன் பொருளாதாரத்தை வளர்த்து உலக வளர்ச்சியை வழிநடத்தி இருக்கிறது.

பிற சோசியலிச அனுபவங்களும் ஒரே மாதிரியானவை. 6 ஆகஸ்ட் 2021 அன்று சீனாவில் பத்து லட்சத்துக்கு 3.22 உயிர் இழப்புகள் என்று இருந்தது. வியட்நாம், லாவோஸ் ( உலகத்திலேயே அதிகமாக குண்டுவீசப்பட்ட நாடு), கியூபா, வெனிசுலா மற்றும் நிகராகுவா ஆகிய நாடுகளின் கோவிட்-19 இறப்பு விகிதம் பத்து லட்சத்துக்கு பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது 27.94, 0.9, 281.11, 128.92, 29.59. அமெரிக்கா, இங்கிலாந்து, கொரியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளின் பத்துலட்சத்துக்கான இறப்பு விகிதங்கள் 1858.96, 1920.72, 704.81 மற்றும் 1661.87 என பதிவு செய்யப்பட்டுள்ளது. சில கிழக்கு ஆசிய பொருளாதாரங்களான ஜப்பான் மற்றும் தென் கொரியா தன்னுடைய பாரம்பரிய அரசு தலையீடு மற்றும் "கான்பூசியஸ்" சமூக நெறிகளின் காரணமாக விகிதங்கள் பத்து லட்சத்துக்கு 20.61 மற்றும் 41.21 இறப்புகள் என பதிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாளித்துவ நாடுகள் சோசியலிச வெற்றிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. பெரும் மதிப்புமிக்க மருத்துவ பத்திரிக்கையான "தி லேசென்ட்" ஓ.இ.சீ.டீ நாடுகளை மட்டும் ஆராய்ந்து பெருந்தொற்றை மட்டப்படுத்துவதன் மூலம் அதை ஒடுக்குவதை பரிந்துரை செய்துள்ளது. இது சோசியலிச அமைப்பின் பின்பற்றத்தக்க தொற்றை கட்டுப் படுத்தும் முறையை விளக்கியுள்ளது.

மக்களின் திறன் மற்றும் நோய்கிருமியை ஒடுக்குவதற்கு பொது முதலீட்டை பயன்படுத்த விருப்பமில்லாமல் பெரிய பார்மாக்களின் லாபத்திற்கு வழிவகுத்தது, புதிய தாராளவாத அரசுகள் தடுப்பூசிகள் மீது பந்தயம் கட்டியுள்ளது, தடுப்பூசிகள் தேவை என்றாலும் அது மட்டும் போதுமானது கிடையாது. ஒரு சரியான சமூகம் சார்ந்த சோதனை, தடமறிவது மற்றும் உதவியுடன் கூடிய தனிமை படுத்தல் அவசியமானது, குறிப்பாக தடுப்பூசி மீதான தயக்கம், நம்பிக்கை இன்மை, தடுப்பூசிகளை தேவைக்கு குறைந்த அளவில் வைத்தல் என இவை பணக்கார மற்றும் மூன்றம் உலக நாடுகளை கூட பாதுகாக்க இயலாத நிலையில் நிலையில் , புதிய உருமாற்றங்கள் வெளிப்பட்டு படர துவங்கியுள்ளது.

உண்மையில் புதிய தாராளவாத தடுப்பூசி தீண்டாமை புதிய உருமாற்றங்கள் உருவாகுவதை உறுதிப்படுத்தியுள்ளது. பணக்கார 'நாடுகள் குறைந்த அளவில் தடுப்பூசிகளை வாங்கி பெரிய பார்மாக்களின் மருந்து நிறுவனங்களின் "அறிவுசார் உரிமைகளை" பாதுகாத்து பிற நாடுகளை தடுப்பூசி தயாரிப்பில் இருந்து தடுத்து வைத்துள்ளது. சீனாவும் ருஷ்யாவும் தடுப்பூசிகளை குவித்து வைத்து வாங்கக்கூடிய விலையில் மற்றும் கொடையாகவும் கொடுத்த போது மேற்குலகம் இதனை" தடுப்பூசி ராஜதந்திரம்" என ஏளனம் செய்து ஏழை நாடுகளை அவற்றை ஏற்க தடுத்தது.

புதிய மாறுபாடுகள் வரும்போது, புதிய தடுப்பூசிகள் பெரிய மருந்து நிறுவனங்களின் லாபத்தை பெருக்குகின்றன, இவை முதலாளித்துவ சமூகங்களை பொதுமுடக்க சுழற்சியிலும் தளர்விலும் வைத்துள்ளது.

மீண்டெழுதல் என்பது வலுவற்ற "k " வடிவத்தில் இருக்கும் என உறுதிப்படுத்தப் பட்டுள்ள நிலையில் மேலும் சமத்துவமின்மைய ஆழமாகியுள்ளது.

## சோசியலிசத்திற்கான வர்க்கம் மற்றும் தேசிய போராட்டம்

சோசியலிச வெற்றிக்கும் முதலாளித்துவ தோல்விக்கும் உள்ள முரண்கள் முதலாளித்துவ தலை எழுத்தை மேலதிகாரத்தை சர்வதேச ஆதிக்கத்தை

சமன்படுத்தியுள்ளது, வருகின்ற காலங்களில் உலகம் சோசியலிசம் நோக்கிய முன்னேற்றம் சர்வதேச மற்றும் உள்நாட்டு போராட்டங்களை உள்ளடக்கியது.

ஏகாதிபத்திய முதலாளித்துவவாதிகள் போலி அர்ப்பணிப்பு போன்ற புதிய நிலையை திறந்து வைத்துள்ளது.

இவர்களின் மேலாதிக்க பேச்சு மக்களுக்கு முக்கியமான தேவைகளை கொடுக்கவேண்டும் என்பதாக, இவை தடுப்பூசி, பசுமை மற்றும் மருத்துவ தொழில்நுட்பம் அல்லது கல்வி மற்றும் சுகாதார பாதுகாப்பு எனும் கூற்றை முன்வைக்கிறது. நிச்சயமாக தேவை பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அரசு விருப்பமான வாடிக்கையாளராக இருக்கிறது. குடிமக்கள் உரிமை என்னும் பிரசங்கம் சில பொருட்களின் சேவைகளுக்கான தேவைகளை பெருக்கும். லாபத்திற்க்காக அடிப்படை தேவைகளை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவன்ங்களின் லாபம் தனியார் கண்டுபிடிப்பு, உரிமை மற்றும் திறமை எனும் பெயரில் நியாயப் படுத்தப்படுகிறது. திறனற்ற மற்றும் எதேச்சதிகார தனியார் உற்பத்தி சொதப்பல்களையும் தேவையில்லாத பண்டங்களையும் சேவைகளையும் கொண்ட வேளையில் இவை மக்களின் வரிப்பணம் மூலம் அரசால் காப்பாற்றப்படுகின்றன. நிதியில் குருட்டு ஆதாய வேட்டை மற்றும் வாடகை நடவடிக்கைகள்(வாடகை அல்லது வட்டி) தொடர்கிறது.

இந்த புதிய தாராளவாதம் கேள்விக்கு இடம் இல்லாமல் சமூக பிளவுகளை ஆளமாக்குவதன் மூலம் உற்பத்தி சோர்வின் காரணமாக எதிர்ப்பை சந்திக்கும். அமைப்பாக்கப்படாத மற்றும் ஆபத்தை உணராத இடதுசாரி எதிர்ப்புக்கு மத்தியில் அது தோல்வியை சந்தித்து இருக்கின்ற நிலையில் அதன் மோசடி மற்றும் ஊழல் வெளிப்பட்டுக்கொண்டு இருக்கிறது. சர்வதேச அளவில் இந்த முயற்சிகள் ஏகாதிபத்திய மத்தியங்களுக்கு கொண்டு சேர்ப்பது சிறிய சாதனையாக இருந்தாலும் பொறுப்பு உள்ள அரசுகள் வேறுவகையான வணிகம் மற்றும் முதலீட்டு இணைப்பாக சீனாவை மையப்படுத்திய பாதையை தேர்ந்து எடுக்கின்றன.

உண்மையில்," பல்முனை அரசியல் பொருளாதார வடிவங்கள்" முன்னேறும் போது, ஏகாதிபத்தியம் மற்றும் டாலர் ஆதிக்கம் பின்வாங்குகிறது, முதலாளித்துவம் தொடர்ந்து கோளாறு அடைகிறது, சீனாவின் மீதான பனிப்போர் வெற்றியாக தெரியும், ஆனால் மோசமானது எதுவென்றால் ஏகாதிபத்திய கூடாரங்களுக்கு உள்ள பிளவுகள் -நேட்டோவுக்குள்ளும், அரசுகளுக்குள்ளும் மற்றும் முதலாளித்துவ வரகங்களுக்குள்ளும்- சீனாவின் பொருளாதார ஈர்ப்புகளை மேற்குலக பாரம்பரிய நட்பு நாடுகளில் கூட வளர்ந்துள்ளது. அமெரிக்கா, ஐரோப்பா, கிழக்கு மற்றும் தெற்கு ஆசிய மற்றும் ஜனநாயக நட்பு நாடுகள் புதிய `இந்தோ-பசிபிக் நாற்கரகம்`மூலம் சீனாவுக்கு எதிராக அணிதிரட்டும் முயற்சி தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

“விதிகள் சார்ந்த சர்வதேச ஒழுங்கு” என்பது அமெரிக்காவின் மதிப்புகளை சார்ந்து அதன் நோக்கங்களை பூர்த்தி செய்வது என்பது வெளிப்பட்டு இருக்கிறது. இது ஏகாதிபத்தியத்தின் மூன்றாம் உலக நாடுகள் மீதான ராணுவ ஆக்கிரமிப்பு, பொருளாதார தடைகள் மற்றும் போருக்கு எதிரானது. சீனா சர்வதேச அளவில் " மனிதகுலத்தின் எதிர்காலம் சமூகங்களிடையே பகிரப்படுவதை" ஆதரிக்கிறது. இவை பொது நோக்கங்கள், பல கொள்கைகள் மற்றும் இணக்கமாக அமைதியாக மற்றும் ஒன்றாக வாழ்தல் போன்ற ஐநாவின் ஐந்து கொள்கைகளை சார்ந்து இருக்கிறது. இவை மனிதகுலத்தின் பிரச்சனைகளுக்கு மாற்று பாதையை குறிக்கிறது.

முதலாளித்துவம் உள்நாட்டு அளவிலும் சர்வதேச அளவிலும் உறைந்து இருக்கிறது, அதனால் வர்க்கங்களும் நாடுகளும் ஒற்றுமையாக சோசியலிசத்திற்க்காக போராட வேண்டும். இந்த முன்னேற்றத்தில் சில அரசாங்கங்கள் மற்றும் இயக்கங்கள், உதாரணமாக ஈரான் மற்றும் ஏமன் உழைக்கும் மக்கள் மற்றும் சோசியலிச நாடுகள் உடன் பயணிப்பவர்களாக தெரிகிறார்கள். அவர்கள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, போர்கள், தடுப்புகள், பொருளாதார மற்றும் நிதி தடைகள், வண்ண புரட்சிகள் மற்றும் ஆட்சி மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கின்றன, அதனால் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு அவர்கள் உரித்தானவர்கள்.

# மக்கள் மற்றும் தற்பொழுதைய சோசியலிசத்துக்கான மக்கள் தேவை

முதலாளித்துவம் பல காலங்களுக்கு முன்னரே வரலாற்று ரீதியாக முற்போக்குதனத்தை இழந்துவிட்டது. மனிதகுல உற்பத்தியை சமூகமயமாக்கி புதிய தொழிற்புரட்சியான இயந்திரமயமாக்கல், செயற்க்கை நுண்ணறிவு, நானோ தொழில்நுட்பம், குவாண்டம் கம்ப்யூட்டிங், உயிர் தொழில்நுட்பம், இன்டர்நெட் ஆப் திங்ஸ், மூன்று பரிமாண அச்சடித்தல் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் கடமை நமக்கு உள்ளது. முதலாளித்துவதால் தன்னுடைய முழு ஆற்றலையும் வளர்க்க இயலாது. ஆனால சீனா அதன் தரத்தை, அறிவுசார் சொத்து மற்றும் முதலாளித்துவ உலகில் இருந்து வரும் வாடகை அல்லது வட்டி ஆகியவற்றை கட்டுப்படுத்தி அமெரிக்க பாதுகாப்பு அரசின் இணைய மேலாண்மைக்கு சவால் விடுத்துள்ளது.

இன்று சில மக்கள் சோசியலிசத்தை கட்டுகிறார்கள், அனால் பலர் சரிகின்ற மற்றும் கொள்ளையடிப்பது போன்ற மூலதன கட்டுப்பாடுகளால் பலனை அனுபவிக்கிறார்கள். இந்த சமயத்தில் உழைக்கும் மக்கள் வர்க்க உணர்வு பெற்று அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி முதலாளித்துவத்தை தூக்கி எரிந்து சோசியலிசத்தை கட்ட வேண்டும்.

கண்டிப்பாக நாம் சோசியலிசத்தை அடைவோம், பரிவர்த்தனை மதிப்புக்கு பதிலாக பயன்மதிப்பு, உற்பத்தி மற்றும் சமூக தயாரிப்புகள் இயன்ற அளவு வேலை மற்றும் தேவையான அளவு எடுத்துக் கொள்ளுதல் என்ற வடிவில் பொருட்கள் பங்கிடப்படும்- இவை சாலையின் இறுதியாகும், அதற்க்கு முன் நாம் பல சோசியலிச நிலைகளை கடந்து செல்ல வேண்டும்- சமூகமயப் படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் பகிர்வு- உற்ப்த்தி திறன், சமூகம் மற்றும் கலாச்சாரம், பிற மக்கள், குழுக்கள், சமூகங்கள், தனிநபர்களை என அனைவரையும் ஒன்றுபடுத்தி இணக்கமாக வாழ வேண்டும்.

இதனை செய்வதற்கான சாவி அரசின் மூலம் மூலதனம் கட்டுப்படுத்தப்படுவதாகும். அரசும் அதன் பொது அதிகாரமும் மக்களின் கைகளில் இருக்க வேண்டும். சில தனியார் நிறுவனங்கள் மூலதனத்தின் மீது ஆரம்ப கட்டத்தில் ஆட்சி செய்தாலும், சோசியலிச அரசு அதை சமூகமயப்படுத்தி பொது நோக்கங்களுக்காக திட்டமிட வேண்டும். இறுதியாக உற்பத்தி கருவிகளை சமூகமயமாக்கும் கேள்வி நடைமுறை சூழல் சார்ந்தது.

ஒவ்வொரு நாடும் தனக்கான வரலாற்று கட்டமைப்புக்கு ஏற்ப உற்பத்தி வளர்ச்சியை அடைந்துள்ளளது, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் கலாச்சாரம், தனக்கான தனி நடைமுறையில் இந்த பாதையை அடையும். சிலர் பயணத்தில் தாமதமாக இணைவார்கள் சிலர் வழி தவறி போவார்கள்.

மக்களுடைய பெரும்பாலான தேவைகளும் போராட்டமும் " மக்களைவிட பூமியைவிட லாபம் பெரிதல்ல" எனும் கருத்துக் கொள்கையை குறிக்கின்றன.

1. பெருந்தொற்று காலத்தில் உடல், பொருளாதாரம் மற்றும் உணர்வு சார்ந்த பாதிப்புகள் சுகாதார பாதுகாப்பை சமூகமயப் படுத்தியுள்ளது, அனைவருக்கும் இலவசமாக உபயோகத்திற்கு கிடைக்கும் நிலை சோசியலிசத்திற்கான கனவை திறந்துள்ளது. இது சமூகம் சார்ந்த பொது அமைப்புகளை கடைக்கோடி மாவட்டங்களுக்கும் கிராமங்களுக்கும் கிடைக்கும் வகையில் விரிவுபடுத்தி தற்பொழுதைய மாற்றம் எதிர்கால தொற்றில் இருந்து காத்து சிகிச்சை அளிக்க கூடிய வகையில் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சுகாதார பாதுகாப்பு அமைப்புகள் ஏழை நாடுகளில் இரண்டு

மடங்கு அதிக பலனை தரக்கூடியது. திறமை வாய்ந்த சிறந்த மருத்துவ பயிற்சியாளர்கள் பொதுக்கல்வியை விரிவாக்கி, நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி, ஆகியவற்றை உயர்த்தி தரம் வாய்ந்த வேலையை கொடுக்க வேண்டும் . இப்படிப்பட்ட பொது சுகாதார அமைப்பு உருவாகுவது நிச்சமானால், முழுமையாக இல்லாவிட்டாலும் குறைந்த அளவு மக்கள் தானாக வந்து உழைக்கும் தேவை, ஒரே வகையான கோலங்களான கல்வி, குழந்தை மற்றும் முதியவர் பாதுகாப்பு மற்றும் வீடு அமைப்புகள் ஆகியவற்றில் காணப்படும்.

2. சோவியலிசத்தை நோக்கிய இந்த முன்னேற்ற பாதையை விளக்க மார்க்ஸ் எதை நன்றாக அறிந்தாரோ அதை நினைவுக்கூர வேண்டும்: உற்பத்திக்கு தேவையான இரண்டு முக்கிய கூறுகள் நிலம் மற்றும் உழைப்பு, இவை இரண்டும் சந்தை பொருளோ பணமோ அல்ல. அனால் முதலாளித்துவம் இவைகளை அவற்றாகவே நடத்தி முரண்களில் சிக்கிக்கொண்டது- சமூக உழைப்பின் பலன்களை தனிநபர் அபகரித்தல், சுற்றுசூழல் அளித்தல் மற்றும் விவசாயம், மற்றும் அடிப்படை தேவைக்கான சந்தைப்பொருள் உற்பத்தி, பணம் மற்றும் நிதி நெருக்கடியை நிர்வாகம் செய்தல்.

நிலம், உழைப்பு மற்றும் பணம் ஆகியவை சந்தை பொருளாக இருப்பதை தவிர்த்தால்தான் சோசியலிசத்தை நோக்கி முன்னேற முடியும்.

சூழலியல் முரண்களை தீர்க்க வேண்டிய அவசியம் மிகைப்படுத்தல் அல்ல. நிலத்தையும் நீரையும் நாம் பொதுவுடைமை ஆக்கி சூழலை பாதுகாக்க சாத்தியமான செயல் திட்டங்களை வகுக்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டங்கள் பரவலான மக்களின் பங்களிப்பையும் மற்றும் பெரிய முதலீட்டையும் கொண்டிருக்க வேண்டும்., இவை படிம எரிபொருளுக்கு மாற்றாக புதிப்பிக்கக்கூடிய வகையிலான எரிபொருள் மற்றும் கார்பன் இல்லாத இதுவரை காணப்படாத பொது போக்குவரத்து, பல்லுயிர் மீட்டெடுத்தல், காடுகளை வளர்த்தல் மற்றும் உணவு அமைப்பு முறையை மாற்றி அமைத்தல் என இவற்றை நோக்கி நகர வேண்டும்.

அனைவருக்கும் வேலை மற்றும் அதன் சன்மானம், உழைக்க முடியாதவர்களுக்கு உதவி மற்றும் ஒவ்வொரு உற்பத்தி திறன் முன்னேற்றத்திற்கும் வேலை குறைப்பு, தன்னுடய தனிப்பட்ட தேவைகளை நாட்டங்களை முன்னேறல் என அறிவியலும் கலாச்சாரமும் கற்பனைக்கு அப்பால் இருக்கும்.

பணத்தையும் வங்கியையும் தேசியமப் படுத்தி இவற்றை சமூகத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட கருவியாக உற்பத்தியையும் பகிர்வையும் மாற்ற வேண்டும்.

கடந்த காலங்களாக நிலம்,பணம் மற்றும் உழைப்பை தாண்டி அறிவும் தொழில் நுட்பமும் அறிவுசார் சொத்துக்களும் சந்தை ஆக்கப்பட்டிருக்கிறது. இயற்கையையும் கலாச்சாரத்தையும் போன்று அறிவும் தொழில்நுட்பமும் மனிதகுலத்துக்கு பொதுவாகும். இந்த சந்தைமயத்தை மாற்றி கல்வி, ஆராய்ச்சி மற்றும் அறிவு இலவசமாக சமூகத்தில் ஓடவேண்டும்.

3. சோசியலிசத்திற்க்கான முன்னேற்றம் பகுத்தறிவு கொள்கைகளில் சாய்ந்துருக்கிறது, அதன் ஏகபோகங்கள்- வளங்களை எடுத்தல், போக்குவரத்து, எண்முறை தளங்களில் உள்ள தனியுடமை, சமூகத்தின் முழு ஆற்றலை தடுக்கிறது- உயிர்களுக்கு அடிப்படை தேவையான உற்பத்தியை செய்வது- உணவு, வீடு, கல்வி அல்லது அதிகாரப்பாதுகாப்பு- இவை கடுமையாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் அல்லது அரசு உடையமை ஆக்கப் பட வேண்டும்.

சோசியலிசம் நோக்கிய முன்னேற்றம் எங்கு வர்க்கம் மற்றும் சர்வதேச போராட்டங்கள், மக்கள் ஏற்பாடு மற்றும் பொதுவுடைமை முன்னேறி இருக்கிறதோ அங்கு மென்மையாக இருக்கும். கண்டிப்பாக தற்பொழுது இருக்கின்ற வரையறைகளை நீக்கி- வர்க்கம், பாலினம் மற்றும் நிற பாகுபாடுகள்- முழுமையாக ஜனநாயகப்படுத்த வேண்டும்.

4. அனைத்து நாடுகளும் குறிப்பாக வளம் நிறைந்தவை உண்மையான தேவை மற்றும் முதலாளித்துவதால் தூண்டப்பட்ட தேவை என இரண்டையும் பிரித்து பார்த்து விவாதிக்க வேண்டும். முதலாளித்துவ தேவை மாயமான தேவை, திருப்தி இல்லாமை, திட்டமிட்ட வழக்கொழிந்த நிலையை உருவாக்கல், இவை நிரந்தர திருப்தி இல்லாமையையும்

பேராசையையும் உருவாக்கி சுற்று சூழலை அளித்து உள்ளது. விமர்சன ரீதியான அனுமானம் தேவையற்ற செயல்களை முடக்கியுள்ளது- உதாரணமாக ஆயுத உற்பத்தி மற்றும் குருட்டு ஆதாய நிதி வேட்டை. இந்த இலக்குகள் சமூகத்திற்கு எளிதாக சர்வதேச சூழ்நிலைகளை முறைகளை கற்றுக்கொடுக்கிறது.

5. நாம் அமெரிக்காவால் ஆதரிக்கப்படும் புதிய பனிப்போரை எதிர்த்து மற்றும் பல்முனை சர்வதேச அரசுகளை கட்டமைத்து அனைத்து நாடுகளையும் வளர்ச்சிக்கு இட்டுச் செல்ல வேண்டும், மற்றும் சவால்களையும் பிரச்சனைகளையும் பகிர்ந்து கொண்டு பொருளாதாரம், அரசியல்,நிதி, விஞ்ஞானம்  மற்றும் கலாச்சார ரீதியாக ஒன்றனைந்த கூட்டாக வெற்றி-வெற்றி என்ற உறவுடன் தீர்க்க வேண்டும். மூன்றாம் உலக நாடுகளின் உண்மையான வளர்ச்சி என்பது மனித திறன் மற்றும் புதிய விஞ்ஞானம் மற்றும் தொழில் புரட்சி தேவைகளை பூர்த்தி செய்து, பொருளாதாரங்களை கூட்டாக இணைத்து தொழிற்சாலை, தகவல்கள் மற்றும் மனித வள சங்கிலி மற்றும் நிலையான இணைப்பு மற்றும் பசுமை உற்கட்டமைப்பு ஆகியவற்றின் ஆதாயத்தை பரவலாக்க வேண்டும்.

6. நாம் ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்கத்திற்கான போலியான பிரபஞ்ச வாதத்தை எதிர்க்க வேண்டும்.பொது மதிப்பீடு மற்றும் கொள்கைகள் கொண்டு பொது சவால்களை எதிர்க்க வேண்டும்: பாதுகாப்பின்மை, நம்பிக்கையின்மை, மரியாதை இன்மை, போர், நியாயமற்ற வளர்ச்சி, அனைத்து வகையிலும் உயரும் சமத்துவமின்மை, நிலம், தண்ணீர் மற்றும் கடல், காற்று ஆகியவற்றின் சேதம் மற்றும் சீரழிவு சுற்றுசூழல் நலத்தையும், சுகாதார உற்கட்டமைப்பு போதாமை, திறனற்ற பேரிடர் மேலாண்மை, மற்றும் இயலாததாக தோன்றும் கடன் ஆகிய சவால்களை எதிர்க்க வேண்டும். சர்வதேச அரசுகள் உலகத்தின் குறிக்கோள்களை பிரதிபலித்து பல்முனை அரசியல்பொருளாதார வடிவங்களின் வளர்ச்சியை வளர்க்க வேண்டும். ஐக்கிய நாடுகளின் கார்ட்டர் மற்றும் ஒன்றுகூடிய அமைதியான வாழ்வு உண்மையானது என இருபக்கங்களையும் சாராத இயக்கங்கள் வாதாடுகின்றன, இவைதான் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுக்கான சிறந்த அடித்தளம்.

உலக நாகரிகம் மற்றும் அதன் பன்முகத்தன்மை ஒரு மிகப்பெரிய வளமாகும். சமத்துவம், மரியாதை, மற்றும் நம்பிக்கை இவைதான் வளங்களை காப்பாற்றும். அமைதி, வளர்ச்சி, சமத்துவம், நீதி, ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் இவைதான் மனித குலத்தின் பொது மதிப்புகள், அனைவருக்கும் ஒரே அரசியல் அமைப்பு என்பது கிடையாது. அதற்க்கு பதிலாக உலகம் தொடர்ச்சியான பரிமாற்றம், பரஸ்பரமாக கற்றுக்கொள்ளுதல் மற்றும் முற்போக்கு நம்பிக்கைகளை பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றை செய்ய வேண்டும்.

உலகத்தின் அனைத்து நாட்டுத் தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் நாடுகளும், ஒன்றுபடுக !